CHARTERED ACCOUNTANCY
CAB II ENGLISH MEDIUM
STARTS ON 09.02.2012
VEAL BUSINESS COLLEGE
Contact : 0777 555 738

மாசி மாதம் 09ம் திகதி

February 09, 2013

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 29

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## - முதலாவது பட்டதாரியை உருவாக்கியது -

# திருமலை சல்லி அம்பாள் வித்தியாலயம்

அண்மையில் வெளியான 2012 க.பொ.த.(உ/த) பெறுபேறுகளில் தி/சல்லி அம்பாள் மகா வித்தியாலயத்தில் இருந்து கலைப்பிரிவில் தோற்றிய செல்வி. சின்னராசா ஆனந்தி A, 2B பெறுபேற்றைப் பெற்று, திருமலை மாவட்டத்தில் 7வது இடத்தைப் பெற்றுள்ளார். இவர் இந்து நாகரீகம் - A, புவியியல் - B, தமிழ் - B நிலைகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சிறந்த பெறுபேறு தொடர்பாக அப் பாடசாலையின் அதிபர் மலைமுரசிற்கு வழங்கிய செவ்வியில் "2001ம் ஆண்டு எமது வித்தியாலயத்தில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பன்னிரண்டாவது வருடத்திலேயே முதன் முதலில் எமது பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகத்திற்கு ஆனந்தி தெரிவாகியுள்ளார். அத்துடன் சல்லிக் கிராமத்திலிருந்து அவர் தெரிவு செய்யப்பட்டமை, எமது பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமையும், புகழும் சேர்த்துள்ளது. இது ஒரு வரலாற்று சாதனை. அத்துடன் தனியே




பாடசாலையின் வளங்களை மட்டும் பயன்படுத்தியே இச்சாதனையை அவர் புரிந்துள்ளார். அதாவது பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட அறிவைக் கொண்டே இவர் இச் சாதனையை நிகழ்த்தியுள்ளமை மிகப் பெரிய விடயமாகவுள்ளதுடன் இதனூடாக அவர் கல்விச் சமூகத்திற்கும் மாணவர்களுக்கும் ஒரு செய்தியை விடுத்துச் சென்றுள்ளார். அச் செய்தியாதெனில் பாடசாலை ஆசிரியர்களினால் நிகழ்த்தப்படும் பாடசாலைக் கல்வியினை மட்டும் சரியாகப் படித்தாலே பல்கலைக்கழகத்திற்குள் புக முடியும் என்ற செய்தியே அச். செய்தி" என அதிபர் தனது செவ்வியில் குறித்தார். அத்துடன் இவ்வெற்றிக்காக தமது முழு முயற்சியையும் செலவிட்ட ஆசிரியர்களுக்கும் அவர் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

தொடர்ந்து செல்வி. ஆனந்தியுடனான எமது செவ்வியில் "தி/சல்லி அம்பாள் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி முதல் க.பொ.த. உயர்தரம் வரையில் கல்வி கற்றேன்.


(7ம் பக்கம்)

## சுதந்திர தின முன்னேற்பாட்டில் உடைத்தழிக்கப்பட்டதா வெலிக்கடைத் தியாகிகளின் அரங்கப் பெயர்ப் பலகை ???

திருமலையின் டச்சுக் கடற்கரையில் " வெலிக்கடைத் தியாகிகளின்" நினைவுடன் உருவாக்கப்பட்டிருந்த திறந்த அரங்கின் பெயர்ப் பலகையானது 65வது சுதந்திர தின முன்னேற்பாடுகளின் போது 'இனந்தெரியாதோரால்' அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரங்கானது பல வருடங்களுக்கு முன்

(7ம் பக்கம்)



## கோணேசர் முன்றலில் குத்தாட்டம் !!!

உலகப் புகழ்பெற்ற திருக்கோணமலைக் கோணேசர் ஆலய முன்றலில் கடந்த வாரம் தென்பகுதியிலிருந்து வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் குத்தாட்டம் போட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

கோணேசர் கோயிலுக்கு போகும் வழியிலுள்ள இறுதி மர நிழலின் கீழ் கூடிய இவர்கள் தம்மை மறந்து ஆடத் தொடங்கியிருந்தனர். சத்தமாகப் பாடல்களைப் பாடி ஆடிய இவர்களின் ஆட்டத்தை அனைவரும் கண்டு களிக்கக் கூடியதாக இருத்தது.

ஆலயப் பரிபாலன சபையின் கீழ் இயங்கும் பாதணிகள் வைக்குமிடம் மற்றும் அதற்கு நேர் எதிரிலுள்ள அங்காடி போன்றவற்றில் ஆலயத்துடன் தொடர்புடையவர்கள் பிரசன்னமாயிருந்தும் இக் குத்தாட்டத்தைத் தடுக்க எவரும் முன்வரவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

## சிந்தனை என்னும் ஆயுதம் !!!

அண்மையில் எனது விரிவுரை யொன்றின் போது இளம் மாணவன் ஒருவன் " சிறந்த முயற்சியொன்றை நாம் முன்னெடுக்கும் போது மற்றையவர்கள் ஏன் எமக்கு உதவி செய்ய முன்வருவதில்லை? என்று கேட்டான். 'வெற்றி' என்னும் கருப்பொருளை நோக்கியதாகவிருந்த என்னுடைய விரிவுரையின் இடையில் எழுப்பப்பட்ட சவால் மிக்க கேள்வியாக அது இருந்தது.

முதலில் ஒன்றை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். எமது சிந்தனை மிகச் சரியாக இருக்குமானால் அச் சிந்தனையே சரியான மனிதர்களை எம்மிடம் நெருங்க வைக்கும் என்பது முதலாவது விடயம். அதாவது "நீ எதனை இடைவிடாது சிந்திக்கின்றாயோ அது ஆகவே நீ ஆகின்றாய்'' என்ற கருத்து உண்மையில் எமது சிந்தனையின் ஆற்றலை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. அதனாலேயே நாம் எதனைச் செய்ய முயற்சிக்கின்றோமோ அதன் மீதான இடைவிடாத சிந்தனை அச் செயல்பாட்டிற்குத் தேவயான மனிதர்களை மற்றும் ஏனைய வளங்களை எமக்கு ஈட்டித் தந்து விடும்.

நாம் செய்ய விளைகின்ற விடயம் மீது கட்டற்ற நம்பிக்கையை நாம் கொண்டிருக்க வேண்டும். 'என்னால் அது முடியும் ' என்ற கட்டற்ற சிந்தனையே அச் செயற்பாட்டை நிகழ்த்தி முடிப்பதற்கான அடிப்படையாகவிருக்கின்றது. சிந்தனையில் வெல்பவனால் மட்டுமே செயற்பாட்டில் வெல்ல முடியும். இதே கருத்தையே இலங்கையின் விண்ணோடத் துறையின் தந்தை என நான் கருதுகின்ற திரு. மணிவண்ணன் அவர்கள் அண்மையில் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அடுத்து எமது சிந்தனையில் 'நான் வெல்வேன்.' என்ற கருத்து மட்டுமே பதிந்திருக்க வேண்டும். அதன் ஊடாகவே நாம் வெற்றியை நோக்கி நகர முடியும். நான் வெல்வேன் என்ற சொற்றொடரின் பின் நான் முற்றுப்புள்ளியிட்டிருக்கின்றேன். ஏனெனில் அதன் பின் எந்தச் சந்தேகங்களுக்கும் அங்கு இடமில்லை. நான் வெல்வேனா?, நான் வெல்லும் வாய்ப்புக்கள் உள்ளது?, நான் வெல்ல முடியும்! போன்ற சந்தேகக் குறிகளுக்கு அங்கு இடமில்லை. நான் வெல்வேன் என்று சிந்திப்பவனால் மட்டுமே வெற்றியடைய முடியும். தோமஸ் அல்வா எடிசனின் ஆயிரமாவது முயற்சியில் தான் மின்குமிழ் கிடைத்தது. அப்போது அவரிடம் கேட்ட கேள்வி நீங்கள் 999 தடவைகள் தோற்றீர்களா? என்பதே. அவர் சொன்ன பதில் அத் 999 தடவைகளும் எப்படி மின்குமிழைச் செய்யக் கூடாது என்று கற்றுக் கொண்டேன் என்பதே. ஆகவே அவர் எப்போதுமே வெற்றி பற்றியே சிந்தித்தார். தோல்வி என்னும் வார்த்தையோ அல்லது வெற்றி பற்றிய சந்தேகமோ அவரிடமில்லை. அவரது சிந்தனையே அவரது வெற்றியின் முதல் படி. சிந்தனையை ஓர் ஆயுதமாக்கும் எவரது அகராதியிலும் தோல்வி என்னும் சொல்லும் அவ்வகைச் சொற்றொடர்களும் இருப்பதில்லை. -ஆசிரியர்-

## அபிவிருத்தி, நல்லிணக்கமே குற்றச்சாட்டுகளுக்கு நல்ல பதில்: 65வது சுதந்திர தினத்தில் ஜனாதிபதி

நாடு பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்டதன் பின்னர் இறைமை, ஒருமைப்பாட்டிற்காக பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கமே சிறந்த பதிலாகும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

நாட்டின் 65வது சுதந்திர தினத்தின் தேசிய வைபவம் திருகோணமலையில் முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெற்றது. அங்கு தேசியக்கொடியை ஏற்றிவைத்து படைகளின் தளபதிகளுக்கு முன்பாக நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

"திருகோணமலை துறைமுகத்தை கைப்பற்றும் நோக்கமே வெளிநாட்டு படைகளுக்கு இருந்தது. நாடு 1948ம் ஆண்டு சுதந்திரம் அடைந்த போதிலும் திருகோணமலையில் பிரித்தானிய படையினர் முகாம்களை அமைத்து தங்கியிருந்தனர். அவர்களின் முகாம்கள் 1956ம் ஆண்டே அங்கிருந்து அகற்றப்பட்டன.

இந்த பகுதியில் புத்தர் சிலையினை சுற்றி முட்கம்பிகள் அடிக்கப்பட்டிருந்தன. புத்த பெருமானுக்கும் சுதந்திரம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த நிலைமைக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய வகையில் பயங்கரவாதிகளிடமிருந்து நாடு மீட்கப்பட்டது.

சுதந்திரத்திற்கு மட்டுமல்லாது இறைமை, ஒருமைப்பாட்டிற்காக பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர்களுக்கு பதிலளிக்க வேண்டுமாயின் நாட்டில் அபிவிருத்தி முன்னெடுக்கப்படல் வேண்டும். நல்லிணக்கம் இருத்தல் வேண்டும்.

1948ம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை கிடைத்தது. ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கின்ற எந்தவொரு நாடும் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பிரகடனத்திற்கு நாம் கௌரவமளிக்கின்றோம்.

நாட்டில் இன, மத பேதங்கள் இருக்கமுடியாது. பயங்கரவாதிகள் தலைத்தூக்குவதற்கும் இடமில்லை. நாட்டில் சகலருக்கும் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளது. இன, மத வேறுபாடுகள் நாட்டில் அழிவையே உருவாக்கும். பேதங்கள் உருவாகினால் அது நாடடின் அழிவுக்கே இட்டுச் செல்லும். பெற்றுக்கொள்ளப்பட்ட சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான கடமைப்பாடு அரசாங்கத்திற்கு மட்டுமல்ல எதிரணிக்கும் இருக்கின்றது" என்கிறார்.





## 65வது தேசியதினத்தில் அழையா விருந்தாளியானது மழை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 65வது சுதந்திர தினம் கடந்த 04ம் திகதி திருக்கோண-மலையின் பிரட்றிக் கோட்டை கடற்கரை முன்பாக இடம் பெற்றது.

அன்று காலநிலை மாறுதலால் ஏற்பட்ட குழப்ப நிலையின் காரணமாக திருக்கோணமலையில் ஏற்பட்ட மழை இத்தேசிய தினத்தில் அடிக்கடி இடையூற்றினை ஏற்படுத்தியது. ஆனால் கொட்டும் மழையிலும் திட்டமிடப்பட்டபடி தேசியதின நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. எனினும் மழை காரணமாக தேசிய தினத்தில் கலந்துகொண்ட பார்வையாளர்களின் தொகை குறைந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

## உடன் வெளியேறினர் காவல் துறையினரும் முப்படையினரும்

65வது சுதந்திரதின நிகழ்வுக்காக திருக்கோணமலை வந்து நகர பாடசாலைகளில் தங்கியிருந்த வெளி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 3000க்கும் மேற்பட்ட படையினரும், காவல் துறையினரும் சுதந்திரதினம் முடிந்த அன்றே உடனடியாக தமது மாவட்டங்களை நோக்கி விரைந்துள்ளனர்.

கிட்டத்தட்ட ஆறு நாட்களுக்கு மேல் பாடசாலைகளில் தங்கியிருந்த இவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் உடனடியாக தமது திரும்புதலை செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிண்ணியா விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள்..

கிண்ணியாவில் 10 விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்களை பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார்.

தன் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்தே இவ்விளையாட்டு உபகரணங்களை பாராளுமன்ற உறுப்பினர் கையளிப்புச் செய்துள்ளார்.

கிண்ணியா பிரதேசசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேசசபை பிரதிதவிசாளர், கிண்ணியா பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

## கல்லூரி தினத்தை முன்னிட்டு 480 மாணவர்கள் வீதியில் ஓடினர்

கல்லூரி தினத்தை (01.02.2013) முன்னிட்டு ஸ்ரீ.இ.கி.ச கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவர்கள் வீதி ஓட்டத்தில் 25.01.2013 அன்று கலந்துகொண்டனர். இவ்வீதி ஓட்டம் தொடர்ந்து பன்னிரண்டாவது வருடமாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ் வீதியோட்டத்தில் சுமார் 480 இற்கும் மேற்பட்ட கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் நடப்பு ஆண்டிற்கான முதலாவது கூட்டத்தொடர்

திருகோணமலை மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் நடப்பு ஆண்டிற்கான முதலாவது கூட்டத்தொடர் திருகோணமலை மாவட்ட அன்புவழிபுரம் விவசாயப் பயிற்சி நிலையத்தில் 2013.01.31 (வியாழக்கிழமை) அன்று நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.குகதாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட திவிநெகும பணிப்பாளர் உப்பாலி ராஜபக்ச, திருகோணமலை மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் விவசாய உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், விவசாய அபிவிருத்தியுடன் தொடர்பான கம்பனிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தொடரின்போது, 2013ஆம் ஆண்டில் தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய விரிவாக்கத்தினை மாவட்ட மட்டத்தில் விஸ்த்தரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டதுடன் மாவட்ட மட்டத்தில் விவசாயிகளுக்கு 2013 ஆம் ஆண்டிற்கான விதைநெல் மற்றும் பசளை விநியோகம் போன்ற விடயங்கள் பேசுபொருள் ஆகியிருந்தன. அத்துடன் விதை உற்பத்தி பயிற்சிகள், தொடர்பாகவும் பயிர்ச் சிகிச்சை முகாம் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன் 2012 மார்கழி மற்றும் 2013 தை மாதங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய நிலங்களின் மீளக்கட்டுமானம் தொடர்பாகவும் ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டதாக மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

## அமைச்சரவை மாற்றத்தில் திருமலையின் மு.கா புறக்கணிக்கப்பட்டுள்ளது

### கிண்ணியா பிரதேசசபையின் பிரதி தவிசாளர்

கடந்த வாரம் நிகழ்ந்த அமைச்சரவை மாற்றத்தின் போதும் மற்றுமொரு முறை திருமலை மாவட்டம் முஸ்லிம் காங்கிரஸின் தலைமையினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேசசபையின் பிரதி தவிசாளர் கே.எம். நிஹார்

(7ம் பக்கம்)

## திருமலைக்குப் பிரதி அமைச்சர் பதவியைப் பெற்றுத்தருவேன்

### மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம்

திருகோணமலை மாவட்டத்துக்கு பிரதி அமைச்சர் பதவியொன்றைப் பெற்றுத் தருவதற்கு ஜனாதிபதியுடன் பேசுவேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின்

(7ம் பக்கம்)

## ரிசானாவின் 25வது பிறந்த தினம் இலங்கையின் 65வது சுதந்திர தினம்

சர்வதேச அரங்கில் நிரூபிக்கப்படாத குற்றத்தில் சிரச்சேதம் செய்யப்பட்ட ரிசானா றபீக்கின் 25வது பிறந்த தினம் இலங்கை நாட்டின் சுதந்திர தினமன்றே கொண்டாடப்பட்டுள்ளது. 1988 பெப்ரவரி 4ம் திகதி பிறந்த ரிசானா தனது 17 வயதில் சுதந்திரத்தை இழந்து 8 வருடங்கள் தன் பக்க நியாயத்தை உலகிற்கு தெரியப்படுத்த முடியாமலே கொல்லப்பட்டார்.

“நாம் முயன்றோம்” “ஆனால் முடியாமல் போய்விட்டது” என்ற வார்த்தைகளுடனேயே அரசியல் அரங்கிலிருந்து அவர் பெயர் அகற்றப்பட்டுவிட்டது.

65வது சுதந்திர தின வைபவத்தில் பங்கேற்குமாறு ரிசானாவின் குடும்பத்திற்கு விடுக்கப்பட்ட அழைப்பை “தற்போது அவ்வாறான மனநிலையில் இல்லை” எனக்கூறி அவரது குடும்பம் கலந்துகொள்வதை தவிர்த்துள்ளது. அதேவேளை சுதந்திர தின விழாவிற்காக திருமலைக்கு பயணித்திருந்த ஷிராந்தி இராஜபக்ச அவர்கள் ரிசானாவின் குடும்ப நலனை விசாரித்து அறிந்தார். அத்துடன் பரிசுப்பொருட்களையும் வழங்கியிருந்தார்.



## இராணுவத் தளபதி சம்பூர் பயணம்

சம்பூரின் மீள் குடியேற்ற வீட்டுத்திட்ட கட்டுமானப் பணிகளை ஆராய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய கடந்த 01ம் திகதி சம்பூரிற்கு வருகை தந்திருந்தார்.

சம்பூரின் சீதனம்வெளி கிராமத்தில் கட்டப்பட்டுவரும் 56 வீடுகளின் நிர்மாணப் பணிகளை இலங்கை இராணுவத்தின் பொறியியல் சேவைப் படைப்பிரிவே கிழக்கு இராணுவக் கட்டளைப் பீடத்தின் வழிகாட்டலுடன் மேற்கொண்டு வருகின்றது.

இவ் வீடுகளில் 28 வீடுகள் முற்றாக நிர்மாணிக்கப்பட்டுவிட்டன. அதற்கான செலவு ரூபா. 9.5 மில்லியன்களை “ஹபிடாட் ஹியூமானிட்டி ஸ்ரீலங்கா” நிறுவனம் வழங்கியிருந்தது.






## சோழரின் திருமலை மீதான ஆக்கிரமிப்பும், அதன் தாக்கமும்...

### அறிமுகமும் காரணமும்

சோழர்களின் இலங்கை மீதான ஆக்கிரமிப்புக்கும் பிற நாடுகளின் மீதான ஆக்கிரமிப்புக்கும் ஒரே காரணங்கள்தான் எனவே, வாருங்கள்...

இன்றைய கால கட்டத்தில் நம் அருகில் உள்ள இந்தியா, சீனா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் தான் தற்பொழுது உலகில் வேகமாக வளர்ச்சிப் பெற்று வரும் பொருளாதார நாடுகள் என்று பொருளாதார வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

சரி, அது கிடக்கட்டும். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இதே நாடுகளுக்குள் பொருளாதாரம், வர்த்தகம் என்பவற்றை பல்லவர்களுக்கு பிறகு சோழர் என்ற அதிகார மையம் ஆண்டு கொண்டு இருந்தது. சுவாரசியம் என்னவென்றால் அதில் நம் இலங்கைக்கும் முக்கியமான பங்கு இருந்தது. இன்றுவரை அந்த பங்கை பறைசாற்றி நிற்பது திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்கள்.

அக்கால சோழ மன்னர்களான ராஜராஜ சோழன், ராஜேந்திரச் சோழன் போன்றோர் தன் ஆளுமையையும், அதிகாரத்தையும் நிலைநாட்ட மட்டுமல்லாமல் பொருளாதார காரணங்களுக்காகவே சேர, பாண்டிய, இலங்கை, சுமத்ரா, பர்மா, கடாரம் (தற்போதைய மலேசியா), மாலை தீவுகள் போன்ற நாடுகளின் மீது படை எடுத்தனர். தன் நாட்டு வணிகர்களுக்கும், பொருளாதாரத்திற்கும் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாகவே பல போர்களை சோழ மன்னர்கள் தொடுக்க காரணம் ஆயின. ஸ்ரீவிஜய நாட்டின் மீது போர் தொடுத்த ராஜேந்திரச் சோழன் தன் வணிகர்களுக்கு இடையூறு செய்த மன்னர்களுக்குப் பாடம் புகட்டிய பிறகு, அவர்களிடமே ஆட்சியை ஒப்படைத்து விட்டான். தன் வணிகர்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்தான் என்கிறது வரலாறு.

அக்காலத்தில் சுமத்ரா தீவுகள், கடாரம், பர்மா போன்ற பகுதிகள் ஸ்ரீவிஜய நாடு என்று அழைக்கப்பட்டது. ராஜராஜ சோழன் காலத்தில், அந் நாட்டை ஆண்ட மன்னன் பெயர் சூடாமணிவர்மன். ஸ்ரீவிஜய நாட்டுக்கும், சோழ நாட்டுக்கும் இடையே நல்லுறவும் வர்த்தக தொடர்பும் இருந்தது. சோழ சம்ராஜ்யத்திற்கு வர்த்தகம் செய்ய ஏராளமான வியாபாரிகள் ஸ்ரீவிஜய நாட்டில் இருந்து வருவார்கள். கடாரத்து இரும்பு, தேக்கு மரங்கள் போன்றவை ஸ்ரீவிஜய நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அது போலவே சோழ நாட்டிலும் அதன் ஆக்கிரமிப்பில் இருந்த இலங்கையிலும் விவசாயம் செழித்தோங்கியதால் மிகுதியான தானியங்கள், ஏலம், மிளகு, நெசவுப் பொருட்கள் போன்றவை தெற்காசிய மற்றும் சீனா, அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சுமத்ரா மட்டுமல்லாமல் சீனா மற்றும் அரபு நாடுகளில் இருந்து வர்த்தகர்கள் சோழ நாட்டில் வணிகம் செய்து கொண்டிருந்தனர். வர்த்தகத்தில் நாகப்பட்டினம் துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகம் முக்கிய இடம் வகித்ததன. சோழ நாட்டில் பல வர்த்தக அணிகளை ஏற்படுத்தினார்கள். பல பொருட்களில் வர்த்தகம் நடைபெற்றது.

ஸ்ரீவிஜய நாட்டுடன் நல்லுறவாகச் சென்று கொண்டிருந்த வர்த்தகம், ராஜேந்திரச் சோழன் காலத்தில் பிரச்சனைகளை எதிர்கொண்டது. சூடாமணிவர்மன் காலத்திற்குப் பிறகு வந்த ஸ்ரீவிஜய மன்னர்கள் சோழர்களின் வர்த்தகத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தினார்கள். குறிப்பாக சோழ நாட்டிற்கும், சீனாவிற்கும் இடைய இருந்த வர்த்தகத்தை சீர்குலைக்கும் முயற்ச்சியிலோ, அல்லது சீனாவுடன் தங்களுடைய வர்த்தகத்தை மேம்படுத்தி சோழ நாட்டு வர்த்தகத்தை பாதிப்படையச் செய்யும் செயலிலோ, ஸ்ரீவிஜய மன்னர்கள் ஈடுபட்டதாகக் கருதப்படுகிறது. தன் வர்த்தகத்திற்கு இடையூறு ஏற்பட்டதால் ஆத்திரம் அடைந்த ராஜேந்திரச் சோழன் தனது கடற்படையைக் கொண்டு ஸ்ரீவிஜய நாட்டின் மீது 1025ம் ஆண்டு போர் தொடுத்தான்.

அவ் வர்த்தக போர் பற்றி அறிய http://highered.mcgraw-hill.com/sites/0072398841/student_view0/chapter2/timelines_and_chronology.html எனும் இணைய முகவரிக்கு சென்றால் பூரண விடயங்கள் கிடைக்கும். (உலக வர்த்தகத்தில் நிகழ்ந்த பல்வேறு முக்கிய நிகழ்வுகளைக் குறிக்கும் இணையத் தளத்தில் இந்த நிகழ்வும் இடம் பெற்றுள்ளது)

போரில் வெற்றி பெற்ற ராஜேந்திரச் சோழன், அந் நாட்டை தானே ஆட்சி செய்யாமல், அம் மன்னர்களிடமே ஆட்சியை ஒப்படைத்து விட்டு ஸ்ரீவிஜய நாட்டை, கப்பம் கட்டும் ஒரு குறுநில நாடாக, சோழ சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டு வந்தான். அது போலவே சோழ மன்னர்களின் வர்த்தகத்திற்கு பெரும் சவாலாக விளங்கியவர்கள் அரபு நாட்டைச் சேர்ந்தவர்கள். தெற்காசிய நாடுகளில் தங்களது வர்த்தகம் அரபு நாட்டை சேர்ந்தவர்களால் பாதிப்படையக் கூடும் என்று கருதிய சோழர்கள் அவர்களின் வர்த்தகத்தை தடுக்க முனைந்தார்கள். அரபு நாடுகள் மீது அவர்களால் படையெடுக்க இயலாத சூழ்நிலையில், அவர்களின் வர்த்தக மையங்களாக விளங்கிய மாலைத்தீவுகள், மலபார் பகுதிகள் (சேர நாடு) மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் மீது படையெடுத்து, அந் நாடுகளைத் தங்களின் ஆளுமைக்கு கொண்டு வந்தார்கள். இதன் மூலம் தங்கள் வர்த்தகத்தை பாதுகாத்துக் கொண்டார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், அரபு நாட்டுடனும் சோழர்கள் வர்த்தகம் செய்துள்ளார்கள். தங்கள் வர்த்தகம் செழிக்க வேண்டும், ஆனால் தங்களுடன் போட்டியிடுபவர்களின் வர்த்தக தளங்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணமே பல போர்களுக்கு காரணமாக இருந்திருக்கிறது. இவ்வாறு தான் இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதாபுரத்தை நிர்மூலமாக்கி, தங்களுக்கு வசதியான பொலநறுவையை புதிய தலை நகராகவும் திருமலையை பிரதான துறைமுகமாகவும் உருவாக்கினார்கள்.

(இன்னும் நடுவோம்)

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றைப் பேசுதல்

**வி. மைக்கல் கொலின்.**

*கடந்த வார தொடர்ச்சி...*

திருமலை மண்ணின் இலக்கியம் வரட்சியுற்றிருந்த காலத்தில் இலக்கிய விடியலுக்கு பூபாளமாக அமைந்தது 'தாகம்' சஞ்சிகையாகும். தொடர்ந்து பத்து வருடங்களாக தனி மனிதனாக நின்று கலை இலக்கிய இதழினை வெளியிட்டதன் மூலம் திருமலை மண்ணுக்கும் ஈழத்து இலக்கிய உலகுக்கும் பணி செய்தவர் தாகம் ஆசிரியர் மைக்கல் கொலின்.

மேலும் இந்நூலில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் 1990ம் ஆண்டு இறுதிப்பகுதியில் திருகோணமலை எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதற்கான நிதி சேகரிப்புக்காக 'தாகம்' கலை இலக்கியவட்டம் 'ராக சங்கமம்' எனும் மாபெரும் இன்னிசை நிகழ்வு ஒன்றினை நடாத்தியது. இசை நிகழ்வு நடாத்துவது என்பது மிகப்பெரிய விடயம் அதுவும் இரு தினங்கள் காலை - மாலை என இரண்டு நிகழ்ச்சிகள் . காலை நிகழ்வு - பாடசாலை மாணவர்களுக்கானது, மாலை திறந்த வெளி இசை நிகழ்வு என மொத்தம் நான்கு நிகழ்வுகளை உள்ளூர் - மற்றும் வெளியூர் இசைக் கலைஞர்களை வைத்து வெற்றிகரமாக நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

இக்காலப்பகுதியில் (1987) திருகோணமலை கலைவட்டம் ஒன்றை அமைப்பு 'கோணைத்தென்றல்' என்ற சஞ்சிகையை வெளியிட்டு தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக மாதாந்த சஞ்சிகையாக வெளியிட்டது. இதன் அமைப்பு ஆசிரியர்களாக இன்றைய திருமலையின் பிரபல சாமி சுவாமி தில்லைக் குமரன், மற்றும் சசிக்குமார் இருவரும் கடமையாற்றினர். இதேவேளை 'கீழைத்தென்றல்' கலாமன்றம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு பல நூல்களை வெளியிட்டது. 'கீழைத்தென்றல்' என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றினையும் வெளியிட்டது.

இதன் பிரதம செயற்பாட்டாளராக நாடக நெறியாளர் 'நக்கீரன்' அவர்கள் செயற்பட்டார்.

1991 - 1992 காலப்பகுதியில் திருமலையில் 'வள்ளுவர் சபை' ஆரம்பிக்கப்பட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே திருக்குறளை இலக்கியமாக பரப்பும் முயற்சியில் பல போட்டிகளை வைத்து பல விழாக்களை நடாத்தி பரிசில்களையும் வழங்கியது. இதன் பிரதம அமைப்பாளராக பிரபல கட்டிட ஒப்பந்தக்காரர் 'குறளமுதம்' திரு. கா. விநாயகசோதி அவர்களும், சபையின் தலைவராக முன்னாள் திருமலை மாவட்ட மேதிக அரசாங்க அதிபர் திரு. ந. புவனேந்திரன் அவர்களும் செயலாளராக திரு. வி. மைக்கல் கொலின் அவர்களும் பணிபுரிந்தனர். இவை தொடர்பாக திருகோணமலையின் இலக்கிய வரலாற்றை முழுமையாக புரிந்தவர்கள் அறிவார்கள்.

மேலும் பவித்திரன் சொல்லும் அமைப்பு, அமைப்பு ரீதியான இலக்கிய முயற்சி என்பது வெறுமனே சொல்லாடலுக்கும், எழுத்துக்கும் உரியதே ஒழிய நடைமுறைச் சாத்தியமற்றதாகும். எங்கும் இயங்கு நிலையில் உள்ள ஒருவர் அல்லது இருவராலேயே ஒரு அமைப்பு உயிர் வாழ்கிறது. கடிதத் தலைப்புக்களில் பல பதவிகளுக்கு பல பெயர்கள் போடப்பட்டிருந்தாலும் ஒருவர் அல்லது இருவரே முழு மொத்த அமைப்பின் இயங்குதாரராக இருப்பார். இதற்கு சில உதாரணங்கள் 1969-1970களில்' திருமலையில் இயங்கிய சங்கப்பலகை - (சரவணபவன்) 1974 - முன்னோடிகள் (திருமலை நவம் - வை. ராஜ் கபூர், புதுவை இரத்தினதுரை) 1977 - புதுமை நெஞ்சங்கள் (மலைமதி சந்திர சேகரன்) ஈழத்து இலக்கியச்சோலை (த. சித்தி அமரசிங்கம்) மனிதவள மேம்பாட்டு நிறுவனம் - (சி. பற்குணம்) தாகம் கலை இலக்கிய வட்டம், (வி. மைக்கல் கொலின்) திருமலை கலைவட்டம் (திரு. தில்லைக்குமரன் - சசிக்குமார்) இப்படியாக தனிப்பட்ட ஒருவரின் அல்லது இருவரின் முயற்சியினாலேயே அமைப்புக்கள் செயற்பட்டன. இதற்கு மிக அண்மைக்கால உதாரணம் திருமலையின் 'இளங்கோ கழகம்' தொழில் நிமித்தம் திருகோணமலையில் வாழ்ந்த காலத்தில் கவிஞர் பெரிய ஐங்கரனால் உருவாக்கப்பட்ட 'இளங்கோ கழகம்' அவர் தொழில் பெற்று யாழ்ப்பாணம் சென்றுவிட்ட நிலையில் இன்று செயல் இழந்து நிற்கிறது. இதுதான் யதார்த்தம்.



ஆனால் இதில் இருந்து சற்று வித்தியாசப்பட்ட அமைப்பாக 'தாகம் கலை இலக்கிய வட்டம்' அதன் ஸ்தாபகரான இக்கட்டுரை ஆசிரியர் உயர் கல்வி நிமித்தம் மட்டக்களப்பு சென்றுவிட்ட நிலையிலும் அவரது வழிகாட்டலில் பல செயற்பாடுகளை திருகோணமலையில் ஆற்றியே வந்துள்ளது. தாகத்தின் செயற்பாடுகளின்பால் கவரப்பட்ட முன்னாள் திருகோணமலை நகரபிதா அமரர். பெ. சூரிய மூர்த்தி அவர்கள் தனது நகராட்சி மன்ற கட்டிடத் தொகுதிக்குள்ளேயே 'தாகம்' கலை இலக்கிய வட்டத்திற்கு என தனியான அலுவலகத்தை அமைத்துத் தந்தது நிறுவன ரீதியான தாகத்தின் செயற்பாடுகளுக்கு மிகவும் பெரிய வெற்றியாகும். தாகத்தின் முன்னரும், தாகத்தின் பின்னரும் இதுவரை ஒரு அமைப்பு அரச கட்டிட தொகுதியில் அலுவலகம் கொண்டு இயங்கவில்லை என்பதே வரலாற்று உண்மை.

இக்கட்டுரை ஆசிரியரை தொடர்ந்து தாகம் கலை இலக்கிய வட்டத்தின் பொருளாளர், உபதலைவர் என பல இளைஞர்களும் உயர்கல்விக்காக பல்கலைக் கழகம் சென்றுவிட்டதன் காரணமாகவும் ஏனைய உறுப்பினர்கள் தொழில் வாய்ப்பு பெற்று வேறு மாவட்டங்களுக்கு சென்றுவிட்ட நிலையிலுமே தாகம் தனது சேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும் பவித்திரன் குறிப்பிடும் இலக்கியவாதிகளுக்கிடையே 'கூதல் போக்கு' திருகோணமலைக்கு மட்டும் உரித்தல்ல. எங்கெல்லாம் இலக்கியவாதிகள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் 'கூதல் போக்கு'ம் கோஷ்டி மோதல்களும் இருப்பது சகஜமே. இது ஆரோக்கியமானதும், காத்திரமானதுமான இலக்கிய செயற்பாட்டிற்கு உரம் சேர்க்கும் முயற்சிகள். மட்டக்களப்பிலும் இலக்கியவாதிகளுக்கிடையே 'கூதல்' உள்ளது. அம்பாறையில் உள்ளது, யாழ்ப்பாணத்தில் உள்ளது. வவுனியாவில் உள்ளது. ஏன் மலையகத்தில் உள்ளது, கொழும்பில் உள்ளது, இது தவிர்க்க முடியாதது. ஆக இலக்கியவாதிகளுக்கிடையே 'கூதல்' என்பது கருத்தியல் ரீதியானது. இது மேலும் மேலும் பல இலக்கிய செயற்பாடுகளை உருவாக்குமே ஒழிய அழித்து விடாது. இங்கு நிலையில் உள்ள இலக்கிய பிரதேசத்தில் இவ்வகையான கூதல்களும், மோதல்களும் இடம்பெறவே செய்யும். இந்த 'கூதல்' இல்லாவிட்டால் ஒரு மந்த நிலையே ஏற்படும். இந்த கூதல்களுக்கிடையே எதிர்நீச்சல் போட்டு இலக்கியம் செய்பவனே நாளை நிலைத்து நிற்பான். மற்றவர்கள் மறைந்து போவார்கள். இது 'தக்கன பிழைக்கும்' என்ற டார்வினின் பரிணாம தத்துவம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

---

தம்பலகாம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 2

## வரலாற்று நாவல்

*சென்றவார இதழில்...*

அவளது இராக ஆலாபனையைக் கேட்டு எப்போதும்போல் அப்போதும் களிகொண்ட குடமுருட்டி ஆறுகளுக்கென்று தனது பாராட்டைச் சொல்லி ஓடிக்கொண்டேயிருந்தது........

*இனி...*

ஆற்றுக்குச் சமாந்தரமாக அமைத்திருந்த பாதை அவளுக்குப் பின்புறமாக இருந்தது. அந்தப்பாதையிலே தம்பலகமத்தின் கிழக்குப்பக்கத்தில் இருந்து மேற்கு நோக்கி ஒரு ஆஜானுபாகுவான வாலிபன் வெண்புரவி ஒன்றிலமர்ந்து வந்துகொண்டிருந்தான். புரவியை அவன் விரட்டாமல் தன்போக்கில் விட்டிருந்ததால் துள்ளல் நடைபோட்டு அது நகர்ந்து கொண்டிருந்தது. அதன் எடை காரணமாகவோ, மணல் பகுதியான பாதை காரணமாகவோ தெரியவில்லை குளம்பொலி எழவேயில்லை. அதன் நடையின் துள்ளலை வெகுவாக அனுபவித்துக் கொண்டு, பக்கத்தில் சுழல் விட்டு ஓடும் குடமுருட்டியாற்றின் எழில் ஓட்டத்தையும் ஆற்றின் வடபுறத்தில் சோலையாகச் சொரிந்து நின்ற தென்னை, கமுகு, மா, பலா, வாழை, கரும்பு போன்ற பயன்தரு விருட்சங்களையும், தம்பலகாமம் தெற்கில் தொடர்சங்கிலி போன்றிருந்த திடல்கள் எனப்பட்ட ஊர்களின் இயற்கை அழகையும் ரசித்துக்கொண்டே சென்றுகொண்டிருந்தான்.

செம்மூக்கன் மாங்காய்கள் ஆற்று நீருக்குமேல் ஆற்றைத் தொட்டுவிடுவது போல குலை குலையாய்த் தொங்கி நிற்கும் அழகை அவன் வேறெங்கும் கண்டதில்லை. அதுமட்டுமல்ல தெற்கே கண்ணுக்கெட்டிய தூரம்வரை மரகதப் போர்வையால் போர்த்துவிட்ட காணி போன்று பசுமையாய்த் தோன்றிய நெல்வயல்களின் அழகு, அதைத் தொட்டுவரும் காற்று நாசியில் ஊட்டிவிடும் குடலைப்பருவத்து மணம், நாற்றுக்கள் காற்றில் அலை அலையாய் ஆடும் எழில்.... அந்த வயல் நடுவே குடில் ஒன்றைப் போட்டுக்கொண்டு ஆயுள் முழுவதும் தங்கிவிடலாம்போலத் தோன்றியது அந்த வாலிபனுக்கு.

அவனைத் தாங்கியிருந்த புரவிகூட தன் எஜமானனின்உணர்வில் இரண்டறக் கலந்ததுபோல தலையை நிமிர்த்தி அந்தக் காற்றின் சுவையை அனுபவித்துக் கொண்டே நடையைத் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்தக் குதிரையின் அழகே தனியாக இருந்தது. சுலபமாகக் கிடைத்துவிடக் கூடிய குதிரையல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட அரேபிய புரவி அது என்பதில் சந்தேகமேயில்லை.

முன்னங்கால்களை அது மாறி மாறி ஊன்றும் போது, அதன் புஜங்களின் தசைகள் அசைந்த விதமும், பின்னங்கால்களின் உதைப்பின் போது அதன் தொடைகளில் ஏற்பட்ட தசை அசைவுகள், அதன் கால் உதைப்பு விசை எவ்வளவு உந்துதலைத் தரக்கூடும் என்பதை ஊகித்துக்கொள்ள உதவின. பிடரி மயிர்களும், வால் மயிர்களும் நீவிவிட்ட பொலிவுடன் இருந்தன. நாளாந்தம் அதன் உடல் நீவி விடப்படுவது தெளிவாக இருந்தது.

துள்ளல் நடைபோட்டு அந்தக் குதிரை ஒரு புதர் முடக்கினைக் கடந்ததும் ஆற்றை அண்டிய மணல்பரப்பிலே ஒரு இளம் பெண் தனியே அமர்ந்திருப்பது கண்டு வியப்படைந்தான். அவன் அவளுக்கு நேர் அருகாக வந்தபோதுதான், அவள் இராகம் ஒன்றை பாடிக்கொண்டிருப்பது தெரிந்தது. எனவே அந்த வாலிபன் சந்தடி செய்யாமல் குதிரையிலிருந்து இறங்கி, அதன் கழுத்தில் தட்டிக்கொடுத்து சத்தம் போடாதே, என்று வாயில் விரல் வைத்து சைகை காண்பித்து விட்டு அருகிலிருந்த செடிக் கிளையில் வெறுமனே அதன் கடிவாளத்தை ஒரு சுற்று சுற்றிவிட்டு மெதுவாக நடந்து சத்தமின்றி அவளை நெருங்கி நின்று, புடைத்து நிமிர்ந்து நின்ற தன் நெஞ்சுக்குக் குறுக்காக கைகளை மடித்துக் கட்டிக்கொண்டு அவள் பாடும் அழகைக் கேட்டு ரசித்துக் கொண்டு நின்றான்.

அவன் ஒரு சங்கீதப் பிரியன். அவனே ராகங்கள் சிலவற்றைச் சுமாராக உருப்போடக்கூடியவன். பாராட்டக் கூடியவகையில் பாடக்கூடியவன் என்று சொல்ல முடியும். இப்போது இந்தப் பெண் சாதகம் செய்யும் கரகரப்பிரியா ராகம் அவனுக்குப் பழக்கப்பட்ட தொன்றுதான். ஆனால் இவள் பாட்டில் ஒரு புதுமை தெரிந்தது. நளினம் தெரிந்தது. இவள் பாடும் விதம் கூட வித்தியாசமாகத் தோன்றியது. அவன் மனதை அது கவரவே செய்தது. சுருள் சுருளாக - பூவானம் சொரிவதுபோல் இராகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய் உச்சஸ்தாயிக்கு அவள் கொண்டு செல்லும் லாவகம், பின்னர் மலையிலிருந்து நெளிந்து வளைந்து கீழிறங்கும் அருவிபோல அவள் குரலில் அந்த இராகம் கீழிறங்கிய பாவம், அவனை வெகுவாகத் தொட்டது. ஒரு கைதேர்ந்த வித்துவானின் பாணியில் அவள் ஆலாபணம் செய்து கொண்டிருந்தாள் என்றே அவனுக்குப் பட்டது.

இப்படி அவளை நெருங்கி நின்று அவன் பாட்டை ரசிப்பது உணர்ந்து, அவள் குழம்பி பாட்டை நிறுத்திவிடப் போகிறாளே என்ற அச்சம் கூட அவனுக்குள் தலைதூக்காமல் இல்லை. தனது எந்தவொரு அசைவும், அப்படியொரு நிகழ்வுக்கு இடம் வைத்துவிடக் கூடாது என்பது போல, சிலைபோன்று அசையாமல் நின்றான். ஏதோ அவன் சிலைபோல நின்று கொண்டிருந்தாலும், அவனது உள்ளமும் சிந்தனையும் அசைவாடவே செய்தன. அவனது போதாத காலம், அவனது குதிரை அந்த நேரம் பார்த்துத் தானா கனைக்க வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறாசின் உலக வலம்

## முன்னாள் அமெரிக்க குறி சூட்டாளர் சுட்டுக்கொலை

"அமெரிக்க குறி சூட்டாளர்" என்ற உலகப் புகழ்பெற்ற சுயசரிதைப் புத்தகத்தை எழுதிய அமெரிக்க கடற்படையின் சீல் படையணியின் முன்னாள் உறுப்பினர் கிறிஸ் கைல் கடந்த சனிக்கிழமை சுட்டுக்-கொல்லப்பட்டார்.

அமெரிக்காவின் பெறுமதிவாய்ந்த குறி சூட்டாளன் என தன்னைத் தானே பிரபல்யப்படுத்திக் கொண்ட 38 வயதான கிறிஸ் கைல் அவருடைய சக ஒருவருடன் டெக்ஸ் ஆஸ் மாநிலத்தில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். 150 ஈராக்கியர்களை தனது குறி சூட்டின் ஊடாக கொன்றுள்ளதாக தானே பிரபல்யப்படுத்திக் கொண்ட கைல் ஈராக்கில் தனது எதிரிகள் தனக்கு "பேய்" என சங்கீதப் பெயரிட்டிருந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். கைல் யுத்தத்தின் பின்னரான மனக்-குழப்பங்களுக்கு உள்ளான இராணுவத்தினரை வழிப்படுத்தும் இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் உருவாக்கத்திற்கு பேருதவி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கைல் 4 தடவைகள் ஈராக்கில் சேவையில் இருந்துள்ளதுடன் ஏனைய பாராட்டுக்களுடன் 2 இராணுவ வெள்ளிப் பதக்கங்களையும் வென்றுள்ளார்.

## 2012 இல் அதிகளவு இராணுவத்தினர் தற்கொலை செய்துகொண்டனர்

2012 இல் கிடைத்த உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களினைக் கொண்டு மொத்தமாக அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த 325 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது. உதவித் தலைமை அதிகாரியான லெப்டினன் ஜெனரல் ஹோவாட் ப்றொம், அதி உச்ச தொகை இது என்று தெரிவித்துள்ளார். இம் 325 தற்கொலைகளில் பணியிலிருந்த போது 182 பேரும் பணியில் அல்லாது 143 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கடந்த பல வருடங்களாக பென்டகன், மன அழுத்தத்துக்கு உள்ளாகும் இராணுவத்தினரை கண்டுகொண்டு மனநல ஆலோசனைகளை வழங்குவதில் பெரும் சவால்களை எதிர்கொள்கிறது என அவர் தெரிவித்தார். இராணுவ நிபுணர்களின் கூற்றுப்படி யுத்தகளத்திற்கும் தற்கொலைக்கும் நேரடித் தொடர்புகள் இருப்பதாக தெரியவில்லை என்றும் தெரியவருகின்றது.

## ஐக்கிய இராச்சியத்தின் மன்னர் றிச்சாட் III இன் மண்டையோடு மீட்பு

லைசெஸ்டர் பிரதேசத்தில் மகிளுந்துத் தரிப்பிடத்திற்காக நிறுத்துவதற்காக தோண்டப்பட்ட குழியிலிருந்து மண்டையோடு மற்றும் எலும்பின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை பிரித்தானிய மன்னர் றிச்சாட் III இனுடையது என்பதை லைசெஸ்டர் பல்கலைக்கழகம் DNA பரீட்சிப்பி-னூடாக உறுதிசெய்துள்ளது. 1485 இல் போரில் கொல்லப்பட்ட றிச்சாட் III லைசெஸ்டர் பிரதேசத்தில் புதைக்கப்-பட்டுள்ளார். இவருடைய உடலின் எச்சங்களில் 10 காயங்கள் இருப்பது தெளிவாகியுள்ளன. அவற்றுள் 8 மண்டையோட்டில் உள்ளது. அவற்றுள் 2 காயங்கள் மிக ஆழமானவை.

1483இல் றிச்சாட்டின் சகோதரன் எட்வேட் IV இன் மறைவு வரை றிச்சாட் இளவரசனாகவே இருந்துள்ளார். இதன் பின் எட்வேட் IV இன் மகனான எட்வேட் V இன் பாதுகாவலனாக நியமிக்கப்பட்ட றிச்சாட் தானே ஆட்சிபீடம் ஏறியிருந்தார். அடுத்த இரு வருடங்களில் அவர் போரில் கொல்லப்பட்டார். லைசெஸ்டரில் உள்ள தேவாலயம் ஒன்றில் அவரது உடல் புதைக்கப்பட்டாலும் 16ம் நூற்றாண்டில் அத்தேவாலயம் அழிக்கப்பட்டபின் றிச்சாட்டின் உடலைக் கண்டுபிடிப்பது ஆய்வாளர்களுக்கு கடினமாக இருந்தது.

## பர்மிய இராணுவத்தையே விரும்புகிறேன்

### – ஆங் சாங் சூகி –

15 வருட காலமாக தன்னை வீட்டுக்காவலில் வைத்திருந்த பர்மிய இராணுவத்தையே விரும்புவதாக ஆங் சாங் சூகி தெரிவித்துள்ளார். பர்மிய இராணுவத்தினை உருவாக்கியவரான சூகியின் தகப்பனார் ஆங் சாங் அவர்களால் ஆரம்பித்து வைத்த பர்மிய நவீன இராணுவத்தின் மீதே தான் மிகப் பெரும் விருப்பங் கொண்டவர் என நோபல் பரிசை வென்ற ஆங் சாங் சூகி தெரிவித்துள்ளார்.

இந்த பர்மிய இராணுவம் தனது தகப்பனாரின் இராணுவம் என தான் எப்பொழுதும் சிந்திப்பதாலேயே அந்த இராணுவம் தன்னை 15 வருடம் வீட்டுக் காவலில் வைத்திருந்த போதும் அவ் இராணுவத்தின் மீது விருப்புடையவராக இருப்பதாகத் தெரிவித்தார்.

## மாலியன் படைநிலைகள் மீது பிரான்ஸ் குறி

பிரான்சிய யுத்த விமானங்கள் வட மாலியிலுள்ள மாலி விடுதலைப்-படையின் பிரதான நிலைகள் மற்றும் படைவதிவிடங்கள் மீது குண்டுத்-தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். "இதனால் மாலி தீவிரவாதிகளின் விநியோக வழிகள் தடைப்பட்டுள்ளதால் இவ்விடயங்களில் நீண்ட காலத்திற்கு அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். வடமாலியில் பணியாற்றும் உதவி நிறுவனங்கள் இத்தாக்குதலினால் வட மாலியில் உணவு மற்றும் எரிபொருளின் விலை அதிகரித்துவிட்டதாக தெரிவித்துள்ளது. மாலி தலைநகர் அந்நாட்டின் பயங்கரவாதிகளின் கைகளில் விழும் ஆபத்தை எதிர்நோக்கியிருந்த வேளை ஜனவரி 11ம் திகதி பிரான்ஸ், இராணுவத்தாக்குதல்களை அவர்கள் மீது ஆரம்பித்தது. தற்போது மாலியின் கிடால் நகரம் மட்டுமே பயங்கர-வாதிகளின் கைகளில் உள்ளது. பிரான்சிய துருப்புக்கள் கிடாலின் வானூர்தித் தளத்தில் நிலை கொண்டிருந்தாலும் கூட நகரக் கட்டுப்பாட்டினை மாலி பயங்கர-வாதிகளே கொண்டுள்ளனர்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 05

பிரதீபா

1. மாடு ரெண்டும் வெள்ளை, மனிதன் ரெண்டும் தஞ்சாவூரு...... எனும் பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
   1. அருவி வெட்டும் போது 2. வண்டி ஓட்டும் போது
   3. ஓடம் ஓட்டும் போது
2. ஆலையிலே சோலையிலே ஆலங்காடி சந்தையிலே கிட்டிப்புள்ளும், பம்பரமும் குறுகியடிக்கப் பாலாறு பாலாறு ..... ..... இப்பாடல் எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?
   1. எல்லே 2. கிட்டிப்புள் 3. பம்பரமாட்டல்
3. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?
   1. அத்தாங்கு 2. கரைவலை 3. நாம்புவ
4. நிலைபேறான காந்தங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் எது?
   1. மின்மணி 2. செவிப்பன்னி 3. ஒலிபெருக்கி
5. பித்தளைத் தட்டிற்கு அருகில் காந்தத் துண்டினை கொண்டு செல்லும் போது
   1. பித்தளை தகட்டை நோக்கி காந்தத் துண்டு இழுக்கப்படும்.
   2. பித்தளைத் தகட்டுக்கும், காந்தத் துண்டுக்கும் இடையில் எதுவும் ஏற்படாது.
   3. ஒரு முனை தள்ளப்படும் அதே வேளை மறுமுனை கவரப்படும்
6. சட்டக் காந்தமொன்றை ஒரு நூலில் கட்டி தொங்கவிடப்படும் போது, அதன் சுயாதீன முனைகள் எந்த திசையை நோக்கி இருக்கும்?
   1. வடமுனைவு வடக்கும், தென்முனைவு தெற்கு நோக்கியும்
   2. வடமுனைவு மேற்கும், தென்முனைவு கிழக்கு நோக்கியும்
   3. தென்முனைவு வடக்கும், வடமுனைவு தெற்கு நோக்கியும்
7. சூரியன் உலகத்திற்கு **ஒளி**யைக் கொடுக்கின்றான். தடித்த எழுத்தின் எதிர்ச்சொல் எது? 1. வெளிச்சம் 2. அருள் 3. இருள்
8. எதனையும் உரிய நேரத்தில் அல்லது உரிய முறையில் செய்யாவிட்டால் அதனால் ஏற்படவுள்ள பயன் குறையும்.
   1. ஆறின கஞ்சி பழங்கஞ்சி 2. ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்
   3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
9. ஏஞ்சலின் கணனி தொடர்பான ................ வகுப்பில் கலந்து கொண்டாள்.
   1. பயிச்சி 2. பயிற்ச்சி 3. பயிற்சி
10. சோமு நேற்றைய தினம் கொடுக்கப்பட்ட பயிற்சியை செய்யாமைக்கான சரியான காரணத்தை தெரிவு செய்க.
    அ. சோமு நேற்று பாடசாலைக்கு வராமை
    ஆ. சோமுவுக்கு அப்பயிற்சிகள் கஷ்டமாக இருந்தமை.
    இ. சோமுவுக்கு அப்பயிற்சிகள் பற்றிய ஞாபகம் இல்லாதிருந்தமை
    ஈ. சோமு இரவு வரை தொலைக்காட்சி பார்த்தமை
    1. அ ஆ இ 2. அ ஆ ஈ 3. ஆ இ ஈ
11. காலை வேளையில் ஒருவர் கிழக்கு நோக்கி நடந்து சென்றால், அவரது நிழல் அவரை பின் தொடரந்து வரும்.
    1. இது எப்போதும் உண்மையாகும். 2. இது பெரும்பாலும் உண்மையாகும்
    3. இது ஒரு போதும் உண்மையன்று
12. டோலி தனது வீட்டிலிருந்து மேற்குத் திசை நோக்கி 200மீ தூரம் சென்ற பின் வடக்கு நோக்கி திரும்பி 100மீ தூரம் சென்றான். பின்னர் கிழக்குத் திசை நோக்கி திரும்பி 500மீ தூரம் சென்று பாடசாலையை வந்தடைந்தான் எனில், சுதனின் வீடு, பாடசாலைக்கு எத்திசையில் உள்ளது?
    1. வடகிழக்கு 2. மேற்கு 3. தென்மேற்கு
13. ஒரு விமானம் காலை 11.45க்கு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு, 1 மணித்தியாலம் 20 நிமிட பயணத்தின் பின் இன்னொரு விமான நிலையத்தில் வந்திறங்கியது. இவ்விமானம் வந்திறங்கிய நேரம் எது?
    1. பி.ப 1.10 2. மு.ப 12.55 3. பி.ப 13.05
14. அம்முவின் வீட்டிற்கும் சந்தைக்கும் இடையிலான தூரம் 1750மீ ஆகும். இத்தூரத்தில் 2/5 பகுதியை நடந்தும், மீதித் தூரத்தை பேரூந்திலும் சென்றான். எனில் நடந்தும், பேரூந்திலும் சென்ற தூரங்கள் முறையே
    1. 350மீ, 1400மீ 2. 700மீ, 1050மீ 3. 1050மீ, 700மீ
15. ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் ஸ்ரீவரன் முன்னாலிருந்து நான்காவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும் போது நான்காவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர் எண்ணிக்கை யாது? 1. 7 2. 9 3. 8
16. ஒருவர் உந்துருளியில் பயணம் செய்யும் போது, கதிமானி 60கிலோமீற்றர் மணித்தியாலம் எனக் காட்டியது. உந்துருளி பயணம் செய்யும் வீதியில் எதிர்த் திசையில் மணித்தியாலத்திற்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுகிறது. எனில், உந்துருளி பயணம் செய்யும் உண்மையான வேகம் மணித்தியாலத்திற்கு எத்தனை கிலோமீற்றர்? 1. 90 2. 40 3. 30
17. ஒரு சதுர வடிவான காணியின் சுற்றளவு 240மீற்றர். இக்காணியின் ஒரு பக்க நீளம் எவ்வளவு? 1. 120மீ 2. 90மீ 3. 60மீ

பெயர்: ..................................................

..................................................

முகவரி: ..................................................

..................................................

..................................................

பாடசாலை: ..................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத வரலாற்றுக் காதல்

ஈவா பிரவுன் என்ற பெண் 1930-ம் ஆண்டு முதல் ஹிட்லருடைய மனம் கவர்ந்த காதலியாக இருந்து வந்தார். ஹிட்லரின் நண்பர் ஒரு புகைப்பட நிலையம் வைத்திருந்தார். அங்கு உதவியாளராகப் பணியாற்றியவள் ஈவா பிரவுன். நண்பரின் புகைப்பட நிலையத்திற்கு ஹிட்லர் அடிக்கடி போவார். அப்போது அவருக்கும் ஈவாவுக்கும் பழக்கம் ஏற்பட்டு காதலாக கனிந்தது. ஈவாபிரானும், ஹிட்லரை உயிருக்கு உயிராக நேசித்தாள். அதனால் மனைவி என்ற அந்தஸ்து கிடைக்காவிட்டாலும் ஹிட்லருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தாள். 1945-ம் ஆண்டு ஏப்ரல் 25-ந்தேதி பெர்லின் நகரை ரியப் படைகள் சூழ்ந்து கொண்டு விட்டன. விமானங்கள் குண்டு மாரிப்பொழிந்து கொண்டு இருந்தன. எந்த நேரத்திலும் ரியப் படைகள், பெர்லின் நகருக்குள் புகுந்து விடலாம் என்கிற நிலை. எதிரிகளிடம் யுத்தக் கைதியாகப் பிடிபட்டால் தன் நிலை என்னவாகும் என்பதை உணர்ந்தார் ஹிட்லர். எதிரிகளிடம் சிக்குவதற்குள் தற்கொலை செய்து கொள்வதே மேல் என்ற முடிவுக்கு வந்தார். தன் முடிவைக் காதலி ஈவாபிரவுனிடம் தெரிவித்தார். ஹிட்லரின் முடிவைக் கேட்டு, ஈவாபிரவுன் திடுக்கிடவில்லை. "வாழ்விலும் உங்களுடன் இருந்தேன். சாவிலும் உங்களுடன்தான் இருப்பேன். உங்களுடன் நானும் தற்கொலை செய்து கொள்வேன்" என்றாள். காதலியின் உண்மையான அன்பைக்கண்டு ஹிட்லர் நெகிழ்ந்து போனார். "பிரவுன்! உன் அன்பு என்னைப் பிரமிக்கச் செய்கிறது. நீ என்னிடம் எது வேண்டுமானாலும் கேள் தருகிறேன்" என்றார். "என்னை உயிருக்கு உயிராக நேசித்தீர்கள். நான் பாக்கியசாலி. இதுவரை உங்கள் காதலியாக இருந்த நான், சாகும்போது உங்கள் மனைவியாகச் சாக விரும்புகிறேன். இதுதான் என் கடைசி ஆசை'' என்றாள் பிரவுன். இந்த வேண்டுகோளை ஹிட்லர் ஏற்றுக்-கொண்டார். ஏப்ரல் 27-ந்தேதி ஹிட்லரின் பிறந்த நாளையொட்டி பாதாள அறையில் விருந்து நடந்தது. ஹிட்லரின் உயிர் நண்பனான கோயபல்ஸ் மற்றும் ராணுவ தளபதிகள் வந்திருந்தனர். ஹிட்லருக்கு பிறந்த நாள் வாழ்த்துப் பாடலை ஈவாபிரவுன் பாடினாள். மறுநாள், ஏப்ரல் 28-ந்தேதி ஹிட்லர் ஈவாபிரவுன் திருமணம் நடந்தது. அன்று காலையிலேயே, தன் அறையை அலங்கரிக்குமாறு உதவியாளர்களுக்கு ஹிட்லர் உத்தரவிட்டார். அதன்படி அறை அலங்கரிக்கப்பட்டது. சட்டப்படி திருமணப் பதிவு செய்ய நகரசபை அதிகாரி அழைக்கப்பட்டார். திருமணப் பதிவு பத்திரத்தில் ஹிட்லரும், ஈவாபிரவுனும் கையெழுத்திட்டனர். கோயபல்சும், மற்றொருவரும் சாட்சிகளாக கையெழுத்திட்டனர். பிறகு விருந்து நடந்தது. ஹிட்லரின் நண்பர்கள் மது அருந்தினார்கள். ஹிட்லர் தேனீர் அருந்தினார். தங்கள் வாழ்க்கை இன்னும் சில நாட்களில் முடியப்போகிறது என்பதை அறிந்திருந்த அவர்கள், கவலையை மறக்க ஆடிப் பாடினார்கள். விடிய விடிய கேளிக்கைகள் நடந்தன. காலை 6 மணிக்குத்தான் ஹிட்லரும், ஈவாவும் உறங்கச்சென்றனர். காலை 11 மணிக்கு, தன் உயிலை எழுதும்படி மனைவி ஈவாவிடம் கூறினார் ஹிட்லர். அவர் கூறக்கூற ஈவா எழுதிய உயில் வருமாறு:-

''வாழ்விலும், தாழ்விலும் என்னோடு இருந்து என் இன்பதுன்பங்களில் எல்லாம் பங்கு கொண்ட ஈவா பிரவுனை என் வாழ்வின் கடைசிக் கட்டத்திலாவது மணந்து கொண்டு கௌரவிக்க வேண்டு-மென்று முடிவு செய்தேன். அதன்படி மணந்து கொண்டேன். நாங்கள் இறந்த பிறகு, எந்த ஜெர்மன் நாட்டு மண்ணுக்காகக் கடந்த 12 ஆண்டு காலமாகப் பாடுபட்டு வந்தேனோ, அந்த ஜெர்மன் மண்ணி-லேயே என்னையும், ஈவாவையும் உடனே எரித்துவிடவேண்டும். இதுவே என் கடைசி ஆசை. என் சொத்துக்-கள் எல்லாம் எனக்குப்-பிறகு என் கட்சிக்கு சேரவேண்டும். கட்சி அழிந்து விட்டால் நாட்டுக்குச் சேர வேண்டும்."



சுதன்

## புணர்தலின் கடைசி விதி

சுஜந்தன்

உயிர் செய்யும் தொழிற்சாலை
செய்...
புணரு
இனிப் புணர்தலை மட்டுமே
தொழிலாகக் கொள்
வெட்கம் பாராதே
நிண்ட இடத்தில்
கண்ட இடத்தில்
விரும்பியோ விரும்பாமலோ
கலவி கொள்

பன்றிகளா நாம்
ஒரு தரம் பிணைந்து
பதினாறு குட்டி போட
ஆமைகளா நாம்
ஆயிரம் முட்டைகளிட்டு
அரைவாசி பொரித்தாலும்
முதலுக்கு நட்டமில்லை
நாம் ஓயாமல் புணர்ந்தாலும்
பிள்ளை பெற பத்து மாதம்
காத்திருக்கும்
மந்தப் பிறவிகள்

வேர்த்துப் பிசுபிசுத்தாலும்
கலவியில் களைத்துப் போனாலும்
எரிச்சல் எடுத்தாலும்
உனக்காக அல்ல.... நமக்காக
சளைக்காமல் கலவி கொள்
பிள்ளை பெருகட்டும்: பெற்றுத்தள்ளு

மூத்த பிள்ளைக்கு
முப்பது வயதானால் என்ன
உன் கடைசிப் பிள்ளை கர்ப்பத்தில்
இருக்க வேண்டும்
கருமுட்டை காலியாகும்வரை
விந்துக்குளம் வற்றிப் போகும்வரை
இதுவே உன் வேலையாகட்டும்

நமக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்
உயிர் தேவையென்றான பிறகு
பிள்ளை மூக்கோடித் திரிந்தாலும்
பிளைத்துக் கொள்ளும்
அதனால் பெற்றுத்தள்ளு

பிள்ளைகள்
பரிசோதனைக் குழாயில்
பிறந்தாலென்ன
பலோப்பியன்குழாயில்
பிறந்தாலென்ன
சிந்திக்காதே
நாளை பீரங்கிக் குழலிலும்
பிள்ளை பிறக்கும்
அலட்டிக் கொள்ளாதே

நமக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்
உயிர் தேவையென்றான பின்
சிந்திப்பதில் பயனில்லை
பெறு: பெற்றுத் தள்ளு

காய்க்காமல் பூக்காமல்
உன் பரம்பரையிலே நாளுக்குப்
பத்துப் பதினைந்தாவது
பாடையில் போகும் காலமிது
ஒரு பிள்ளை போதும் என்று
நீ புணராமல் சோம்பியிருந்தால்

நாளை எறும்பும்
கருக்கட்டிப் பிள்ளை பெறும்
காகத்தின் கூட்டில்
குயில் குஞ்சு பொரிக்காது
முட்டைக்குள் இருந்து சாவோடு
கைவீசி வருவான் நம்பிள்ளை

உயிர்.... உயிர்
நமக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்
தேவையென்றான பிறகு
புணர்தலை மட்டும் நிறுத்தாதே
ஒவ்வொரு நாளும் சுட்டுப் பழக
பிள்ளை பெற்றுக் கொடுக்காவிட்டால்
நாளை
நீ இருக்கமாட்டாய்

▼

சாகித்தியப் பரிசு வென்ற
சம்பூர் சுஜந்தனின்
"நிலம் பிரிந்தவனின் கவிதை" த்
தொகுப்பிலிருந்து.....

# விஸ்வரூபம் ஒரு வியாபார பார்வை!..

விஸ்வரூபம் பட விவகாரத்தில் கடைசியில் யாருக்கும் வெட்கமில்லை என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. கருத்துச் சுதந்திரம், சட்ட நெறிமுறை எல்லாம் எல்லாராலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

கமல்ஹாசனின் படம் தமிழக முஸ்லிம்களுக்கு எதிரானதா இல்லையா என்ற கருத்தை படத்தை மக்களிடம் வெளியிட்டபின்னர்தான் தீர்மானிக்கமுடியும். முன்கூட்டியே தாங்கள் மட்டும் பார்த்து தீர்மானிக்கும் அதிகாரம், தங்களைத் தாங்களே எல்லா முஸ்லிம்களுக்கும் பாதுகாவலர்களாக அறிவித்துக் கொண்டுள்ள மத அடிப்படைவாதத் தலைவர்களுக்குக் கிடையாது. எல்லா ஹிந்துக்களுக்கும் தாங்கள்தான் பிரதிநிதி என்று சங்கபரிவாரம் நிலைநிறுத்த முயற்சிப்பதற்கு சரிநிகர் சமானமான அபத்தம் இது.

ஒரு படம் இந்திய சட்டப்படி தணிக்கை செய்யப்பட்டபிறகு அது வெளியாவதை யாரும் எதிர்க்கமுடியாது. படத்துடன் பிரசிச்னை இருந்தால், எப்படி அனுமதித்தீர்கள் என்று தணிக்கை வாரியத்திடம்தான் கேட்கவேண்டும். அடுத்து மேல் முறையீடாக நீதிமன்றத்துக்கு செல்லவேண்டும். மாநில அரசிடம் மனு கொடுத்து படத்தை அரசு தடை செய்யவைத்த முஸ்லிம் அமைப்புகள் யாரும் நீதிமன்றத்துக்குப் போகவில்லை. அவர்களுக்கு படத்தை கமல்ஹாசன் போட்டுக் காட்டியது, மும்பை தாதா பால் தாக்கரேவுக்கு தன் "பம்பாய்" படத்தை மணிரத்னம் போட்டுக் காட்டிய தவறுக்கு நிகரான தவறு.

கூடங்குளம் அணு உலை பிரச்சினைக்காக இது வரை ஒரு நிருபர் சந்திப்பைக் கூட நடத்தாத ஜெயலலிதா சினிமா காரர்களையும் முஸ்லிம் மதவாதிகளையும் திருப்திப்-படுத்துவதற்காக நிருபர்களை அழைத்து விளக்கக்கூட்டம் நடத்தியிருக்கிறார். அரசு தடை செய்தது சரி என்றும் கமல்ஹாசன் முஸ்லிம் அமைப்புகளுடன் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஜெயலலிதா அதில் அறிவித்திருப்பது படு ஓட்டையான வாதம் சட்ட நெறிகளுக்கு புறம்பானது. அதை கமல்ஹாசன் ஏற்றுக் கொண்டிருப்பதும், கடைசி நிமிடம் வரை கமலுக்கு ஆதரவு தெரிவிக்காமல் பம்மிவிட்டு கிளைமாக்சுக்குப் பின்னர் வரும் சினிமா போலீஸ் மாதிரி கடைசியில் கூட்டமாக வந்த சினிமா துறையினர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிப்பதும் வெட்கக்கேடானவை.

தணிக்கை சான்றிதழ் பெற்ற படத்தை அதன் பின் வேறு யாருக்கும் போட்டுக் காட்டி அனுமதி பெறவேண்டியதில்லை என்ற அடிப்படையான சட்ட உரிமையை ஜெயலலிதாவும் கமல்ஹாசனும் குழி தோண்டி புதைத்துவிட்டார்கள்.

ஏன் ஜெயலலிதா அரசு தடை விதித்தது என்பதற்கு கருணாநிதி சொல்லும் அவதூறான காரணங்களை ஒதுக்கிவிடலாம். ஜெயலலிதாவே சொன்ன காரணம் ஒன்றே ஒன்றுதான். படத்தை வெளியிட அனுமதித்தால், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டு வன்முறை நிகழும் என்று உளவுத்துறை தகவல்கள் சொன்னதால் ஆட்சியர்கள் தடை விதித்தார்கள் என்கிறார் ஜெயலலிதா. அப்படித் தகவல் கிடைத்திருந்தால், வன்முறை செய்யப்போவது யார்? சாதாரண முஸ்லிம்களா? அல்லது 24 அமைப்புகளின் தலைவர்களும் தொண்டர்களுமா? தி.மு.கவும் இடதுசாரி கட்சிகளும் கடை அடைப்பு போராட்டம் அறிவித்தாலே, முன் இரவே எல்லா கட்சி முக்கியஸ்தர்களையும் தடுப்புக் காவலில் கைது செய்யும் போலீசார், ஏன் உளவுத் துறை தகவல்கள் கிடைத்தும் 24 அமைப்புகளின் பிரமுகர்களையோ முக்கிய அமைப்பாளர்களையோ தடுப்புக் காவல் கைது செய்யவில்லை?

கமல்ஹாசன் முஸ்லிம் தலைவர்களுடன் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று இப்போது அறிவிக்கும் ஜெயலலிதா, தம் அரசிடம் முஸ்லிம் அமைப்புகளின் முதல் மனு வந்தபோதே ஏன் இதைச் சொல்லவில்லை? ஏன் அப்போதே கமல்ஹாசனை அழைத்து அந்த அறிவுறுத்தவில்லை? அவர் தரப்பு கருத்தையோ, தணிக்கை வாரியத்தின் கருத்தையோ கேட்காமலே ஏன் அரசு தடைவிதித்தது?

நீதிமன்றம் அரசு விதித்த தடையை ரத்து செய்த மறு காலையிலேயே தியேட்டர் மீது தாக்குதல் என்று பல இடங்களில் வன்முறை ஏற்பட்டதை ஜெயலலிதா சுட்டிக் காட்டுகிறார். ஏன் தீர்ப்பு வந்த இரவே தடுப்புக் காவல் கைதுகளை செய்யவில்லை? வன்முறையில் ஈடுபட்டவர்கள் யார்?

இப்போது பேசித் தீர்க்கும் கட்டைப் பஞ்சாயத்தை அதிகார பூர்வமாக பரிந்துரைக்கும் முதலமைச்சர், தன் அரசு சார்பில் நீதிமன்றத்தில் சொன்னதை ஏன் திரும்பச் சொல்லவில்லை ? கட்சித் தொண்டர் போல, "ஹானரபிள் புரட்சித்தலைவி அம்மா" என்று பேட்டி கொடுக்கும் அரசின் அட்வகேட் ஜெனரல், சென்சார் பெரும் ஊழல் செய்ததாக நீதிபதியிடம் சொன்னாரே, அது இப்போது என்ன ஆயிற்று? அதற்கு தணிக்கை வாரிய தலைவர் லீலா சாம்சனின் கடும் கண்டனத்துக்கு ஜெயலலிதாவின் பதில் என்ன? விஸ்வரூப பட தடை தொடர்பாக இதுவரை நடந்தது எல்லாம் கேவலமான அரசியல், மதவாத, பாசிச நாடகம். ஓட்டுக்காக முஸ்லிம் அமைப்புகளை ஜெயலலிதாவும், தங்கள் மதவெறி அரசியலுக்காக ஜெயலலிதாவை அந்த அமைப்புகளும் பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு பகடைக்காயாக பயன்பட்ட கமல்ஹாசன் நொந்து நூலாகி, வணிக சிக்கலிலிருந்து மீள்வதற்காக கொள்கை சமரசத்துக்கு தள்ளப்பட்டுவிட்டார். இதை விட அவர் திவாலாகி 'தமிழகத்தை விட்டு வெளியே குடியேறும் நிலை ஏற்பட்டிருந்தால், அவரது லட்சோ பலட்சம் ரசிகர்கள் ஆளுக்கு நூறு ரூபாய் கொடுத்து அவரையும் கருத்துச் சுதந்திரத்தையும் காப்பாற்றியிருக்கமுடியும். எதுவுமே நடக்காதது போல அடுத்த சில வாரங்களில் எல்லாரும் அவரவர் வேலையைப் பார்ப்பார்கள். யாருக்கும் வெட்கமில்லை.

தமிழ் இந்தியா டுடேவுக்காக - ஞானி
நன்றி திரு. பாலசுகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பட்டதாரியை....

2012ல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி இந்துநாகரீகம் - A, தமிழ் - B, புவியியல் - B பிரிவில் சித்தியடைந்து திருக்கோணமலை மாவட்டத்தில் ஏழாவது நிலையைப் பெற்றுள்ளேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. எனது குடும்பம் ஏழ்மை நிலையுற்றுள்ள போதும் எனது கல்விக்கு பெற்றோர்கள் உறுதுணையாக நின்றனர். அவ்வாறே நான் கற்ற பாடசாலையும் ஓர் கிராமப்பாடசாலை. அங்கு எனக்கு தரம் 1 முதல் தரம் 13 ஆண்டுவரை கற்பித்த ஆசிரியர்கள், அதிபர் அனைவரும் எனது கல்விக்கு உதவினர். எதுவித மேலதிக கற்றலையும் மேற்கொள்ளாது பாடசாலையின் உதவியுடன் நான் இவ்வாறு சித்தியடைந்துள்ளளேன். எனவே என்னைக் கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும், அதிபருக்கும் எனது மனம் நிறைந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

## அன்புவழிபுரம் கலைமகள் மகா வித்தியாலயம். உயர்தரப் பெறுபேற்றில் சாதனை.

2012ல் முதல் தடவையாக இப் பாடசாலையில் இருந்து க.பொ.த. (உயர்தர) கலைப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய செல்வி. ஜெ. டுவாசினி செல்வி. ச. லேவன்யா ஆகிய மாணவிகள் (மாவட்ட நிலை - 8, 39) பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அத்துடன் தமிழ், இந்து நாகரீகம், ஆகிய பாடங்களில் 100% சித்தி கிடைத்துள்ளது. இதற்காகச் செயற்பட்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை பாடசாலைச் சமூகம் பாராட்டுகின்றது.





## அமைச்சரவை மாற்ற ......

தெரிவித்துள்ளார். அவரது கருத்து கடந்த 28.01.2013 அன்று நடந்த அமைச்சரவை மாற்றத்தில் திருக்கோணமலை மாவட்ட மு.கா. ஆதரவாளர்கள் மீண்டும் ஒரு முறை ஏமாற்றமடைந்திருக்கின்றனர். கடந்த கால அரசியல் வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் போது திருமலை மாவட்டத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது இம் மாவட்டம் மு.காவினால் புறக்கணிக்கப் பட்டே வருகின்றது. இதற்கு உதாரணமாக கடந்த மாகாண சபையில் மு.கா. தனித்துப் போட்டியிட்டு இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியும் மு.கா வழங்கப்பட்ட அமைச்சுக்களில் ஒன்றையேனும் எமது மாவட்டத்திற்கு வழங்க வில்லை.அதனைக் கேட்டபோது கிடைத்த பதில் திருமலை மாவட்டத்திற்கு நல்லது செய்வேன் என்பது மட்டும் தான்.

ஆனால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது மு.கா வினால் வழங்கப்பட்ட நல்லது செய்வேன் என்ற வார்த்தை நிறைவேறுமென எதிர்பார்த்திருந்த ஆதரவாளர்களுக்கு எஞ்சியது ஏமாற்றமே.

எனவே இதனைக் கவனத்தில் கொண்டு மு.கா. தலைமைத்துவம் ஒழுங்கான தீர்வினை எடுக்காது விட்டால் எதிர்காலத்தில் மு.கா. இன் வளர்ச்சிக்கு பல காரணங்கள் தடையாக அமையும் என்பதனை தலைமைத்துவம் உணர்ந்து செயற்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

## திருமலை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் உயர்தரப் பெறுபேறுகள்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2012 அதிதிறமைச் சித்திகளைப் பெற்று 5 மாணவர்கள் பல்கலைகழக தெரிவுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

**வர்த்தகப்பிரிவு**

செல்வன். அமல்தாஸ் தனோஜ் (பொருளியல் - A, வணிகக் கல்வி - A, கணக்கீடு - A), செல்வி. நிலோஷ்கா சிவசாமி (பொருளியல் - A, வணிகக் கல்வி - A, கணக்கீடு - A),

செல்வி. ஜெயகௌரி மகேசன் (பொருளியல் - A, வணிகக் கல்வி - A, கணக்கீடு - A),

செல்வி. பங்கயச்செல்வி நாதன் (பொருளியல் - A, வணிகக் கல்வி - A, கணக்கீடு -B)



**கலைப்பிரிவு**

செல்வன். பாலசுப்பிரமணியம் சுரேஸ் பொருளியல் - A, புவியியல் - B, தழிழ் - C



## சுதந்திர தினத்தில்...

திருமலையின் கடற்கரையான டச்சுக் கடற்கரையில் தமிழீழ விடுதலை இயக்கத்தினால் உருவாக்கப்பட்டு பேணப்பட்டிருந்தது.

ஜுலை 27, 1983ல் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியற் கைதிகள் 35பேர் சிறைக் கலவரமொன்றின் ஊடாக கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கொல்லப் பட்டவர்களில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தோற்றுவிப்பாளர்களான குட்டிமணி, ஜெகன் போன்றோரும் இலங்கைக் காந்தியத்தின் தந்தை எனப் போற்றப்பட்ட கலாநிதி. இராஜேந்திரம் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர்.

இவ்வாறு கொல்லப் பட்டவர்களின் நினைவாக அமரர். திரு. சூரியமூர்த்தி அவர்கள் திருமலை நகர பிதாவாக இருந்தபோது இவ்வரங்கு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது உடைத்தளிக்கப்பட்ட இப் பெயர்ப்பலகையின் மீது அவ் 'இனந்தெரியாதவர்கள்' கறுப்பு மையையும் தடவிச் சென்றுள்ளனர்.

## திருமலைக்குப் பிரதி .....

ஆரம்பகால உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு இறக்கக்கண்டி பாம் விலேஜ் விடுதியில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் திருகோணமலை மாவட்டத்துக்கு பிரதி அமைச்சர் பதவி ஒன்று பெற்றுத்தரப்படும் என்ற எதிர்பார்ப்பில் உள்ள கட்சி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் அண்மையில் இடம்பெற்ற அமைச் சரவை மாற்றத்தின்போது பதவி கிடைக்காததையிட்டு கட்சியுடன் அதிருப்தி அடைந்த நிலையில் உள்ளனர்.

இந்த விடயமாக கட்சி தலைமை பீடத்திற்கு அவசர கடிதங்களை அனுப்பி வைத்திருந்தனர். கட்சி தலைமை எம்முடன் சந்திப்பு ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர்.

இதற்கு அமைவாகவே இந்த சந்திப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எமது கட்சியுடன் எவ்வித கலந்தாலோசனைகளும் இன்றியே அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. புதிய அமைச்சரவை மாற்றம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. இது விடயமாகவும் கட்சி தொடர்ந்து அரசுக்கு ஆதரவு வழங்குவது பற்றியும் ஜனாதிபதியுடன் நான் பேசுவதோடு, பிரதி அமைச்சர் பதவி ஒன்றினையும் இம்மாவட்டத்திற்கு பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பேன் எனவும் தெரிவித்தார்.



## "ரொபர்ட் மெக் டோவை" சந்தித்தார்கள் திருமலை ஊடகவாதிகள்

இலங்கையின் 65வது சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்ளும் முகமாக திருகோணமலை வந்த கனடாவின் உயர்ஸ்தானிகர் ரொபர்ட் மெக் டோவ் அவர்கள் கடந்த திங்கட்கிழமை திருகோணமலை ஊடக இல்லத்தில் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்க உறுப்பினர்களை கண்டு கலந்துரையாடினார்.


இந் நிகழ்வின்போது கடனா உயர்ஸ்தானிகர் ஆலயத்த்தின் நிதியுதவியுடன் இடம்பெறும் ஊடகப் பயிற்சிகள், செயற்பாடுகள் பற்றி ஊடக இல்ல உறுப்பினர்களிடம் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

# 65வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாபெரும் இரத்தான முகாம்

## அகில இலங்கை முஸ்லிம் வாழிபர் சங்க திருமலை கிளை

"உதிரம் கொடுத்து நம் உறவுகளை வளர்த்து சமாதானம்'' என்ற மையக்கருத்துடன் "ஒன்றிணைந்து உயிர் காப்போம்" என்ற தொனிப்பொருளில் இலங்கை சோசலிச சனநாயக குடியரசின் 65வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாபெரும் இரத்ததான நிகழ்வு ஒன்று கடந்த 03-02-2013 ம் திகதி ஞாற்றுக்கிழமை அன்று அகில இலங்கை முஸ்லிம் வாலிபப் பேரவையின் திருக்கோணமலை கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டு ஜமாலியா பலநோக்கு கட்டிடத்தில் இடம்பெற்றது. பல்லின சமூகங்களும் சேர்ந்து வாழுகின்ற திருக்கோணமலைப் பட்டினமும், சூழலுக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழுகின்ற மக்களை ஐக்கியப்படுத்தி சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இந்த நிகழ்வுக்கு நியூ தாஜ் சிட்டி உணவகத்தினர் அனுசரணை வழங்கியதுடன், ஜமாலிய டுடே மீடியா சென்டர் ஊடக அனுசரணையை வழங்கியிருந்தது. காலை 8.00 மணி அளவில் ஆரம்பித்த இவ் இரத்ததான நிகழ்வு மாலை 4.30 மணி வரை இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு பொதுமக்கள் உட்பட பெரும் திரலானோர் கலந்து கொண்டு தமது இரத்தத்தினை முகம் தெரியாத தமது சகோதரர்களுக்காக தானம் செய்தனர். இந்நிகழ்வு சமூக ஒற்றுமையையும் மனிதபிமானத்தையும் எடுத்துக் காட்டியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தெரிந்து கொள்ளுங்கள்...

- தத்துவம் பயின்று ஆன்மீகவாதியான பிறகுதான் கராத்தே வீரர் ஆனார் - புருஸ்லி.
- கார்ல் மார்க்ஸ் தனக்கு பிடிக்காத பக்கங்களை எல்லாம் புத்தகத்தில் இருந்து கிழித்துவிடுவாராம். அவரது நூலகத்தில் கிழியாத பக்கங்களை உடைய புத்தகம் எதுவும் கிடையாதாம். 'தாஸ் காப்பிட்டல்' நூல் எழுத அவருக்கு 14 ஆண்டுகள் தேவைப்பட்டது..
- எடிசன் தன் வாழ்நாளில் மொத்தம் 1368 கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளார். அவர் மூன்று மாதங்கள் மட்டுமே பள்ளிக்கூடம் போனார்.
- லியனாடோ டாவின்சி ஒரு கையால் எழுதிக்கொண்டே மறு கையால் படம் வரையும் திறன் உரையவர். அவர் வரைந்த உலகப்புகழ் பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.

## குட்டிக்கதை

### கடமை

"நான் பரீட்சையில் சித்தியடைய நீதான் உதவி செய்ய வேண்டும்" என்று கடவுளிடம் வேண்டிக் கொண்டான் பாபு. பிள்ளையார் சிலை முன்னால் 108 தோப்புக்கரணம் போட்டான். கோவில் பிரகாரத்தில் மூன்று முறை சுற்றி வந்தான். பாபு ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தான். இப்படி பரீட்சை ஏதாவது வந்தால் அன்றைய தினம் கண்டிப்பாய் கோவிலில் 108 தோப்புக் கரணம் போடுவான்.

அன்று தான் முதல் பரீட்சை. ஆசிரியர் கேள்வித்தாளை கொடுத்தார். பாபு சாமியை வேண்டியபடி கேள்வித்தாளை பிரித்தான். ஆச்சரியமாக இருந்தது. ஒன்றிரண்டு கேள்விகளைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை. "நான் உனக்கு என்ன குறை வைத்தேன்.. ஏன் இப்படி என்னை சோதிக்கிறாய்?" என்று மனசுக்குள்ளாக கடவுளைக் கேட்டான். இரண்டாவது பரீட்சைக்குப் போனான். இரண்டாவது முதல் பரீட்சையை விட மோசமாக இருந்தது. அவனுக்கு மனது சரியில்லை. மீண்டும் கோவிலுக்குப் போய் கடவுளிடம் வேண்டிக் கொண்டான். "உன்னை நம்பியவர்களை கைவிட மாட்டாய். என்று சொல்லுகிறார்களே.. என்னையும் கைவிட்டுவிடாதே." என்று வேண்டியபடி பரிட்சை அத்தனையும் எழுதி முடித்தான். எந்தப் பரீட்சையும் அவனுக்குத் திருப்தியாக அமையவில்லை. ஆனால் எப்படியும் கடவுள் கைவிடமாட்டார் என்று மட்டும் பாபு நம்பிக்கையாய் இருந்தான்.

அன்று தான் பரீட்சை முடிவு தெரியும் நாள். நேராக பள்ளிக்கூடத்திற்கு ஓடினான். அங்கு பரீட்சையில் வெற்றி பெற்றவர்களின் பெயர் பட்டியல் ஒட்டியிருந்தது. அதில் இவன் பெயர் இல்லை. இவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நேராக கோவிலுக்கு ஓடி வந்தான். "அந்தி சந்தி எந்த நேரத்திலும் என்னையே நினைத்திருக்கும் எனக்கு நீ செய்யும் உதவி இதுதானா?" என்று கேட்டான் கடவுளிடம் கடவுள் எப்போதும் போல சிலையாக நின்றிருந்தார். பாபு அழுது புலம்பினான். அன்று இரவு வெகுநேரம் கழித்துத்தான் தூங்கினான் பாபு. "உன்னுடைய சந்நிதியில் எத்தனை தோப்புக்கரணம் போட்டிருப்பேன். என்னை கைவிட்டுவிட்டாயே" என்று தூக்கத்தில் அவன் உதடுகள் முணுமுணுத்தன. அடுத்த வினாடி வானம் இடிந்து விழுவது போன்ற ஒரு சத்தம். பாபு கண்விழித்துப் பார்த்தான். என்ன ஆச்சரியம்? கோவிலில் அவன் கும்பிட்ட அதே கடவுள் உயிரோடு சிரித்தபடி நின்று கொண்டிருந்தார். "நான் பரீட்சையில் தோல்வியடைந்து அழுது கொண்டிருக்கிறேன்... உனக்கு சிரிப்பாய் இருக்கிறதா?" என்று அழுதபடி கேட்டான் பாபு. கடவுள் அவன் அருகில் வந்து அவன் கண்களைத் துடைத்துவிட்டார். "நீ என்னை நம்பியதை விட உன்னை நம்பியிருந்தால், நீ பரீட்சையில் ஜெயித்திருப்பாய்" என்றார் கடவுள். "சாமி, என்ன சொல்கிறாய்..." "ஆமாம் பாபு, என்னைச் சுற்றி வந்த நேரத்தில் நீ எனக்கு தோப்புக்கரணம் போட்ட நேரத்தில் முறையாகப் படித்திருந்தால் நீ வெற்றி பெற்றிருப்பாய்" பாபு மௌனமாக இருந்தான். "கடமையைச் செய்பவன்... கடவுளைக் கும்பிட வேண்டிய அவசியம் இல்லை பாபு" என்றார் கடவுள். பாபு ஆச்சரியமாகக் கடவுளைப் பார்த்தான்.




## பலவீனமான கூந்தலுடையவர்கள் செய்ய வேண்டியவை...



வெயிலில் அதிகமாக அலைவது நேரம் தவறி உண்பது உப்பு நீரில் தலை குளிப்பது போன்றவற்றாலும் கூந்தலுக்குத் தேவையான போஷாக்கு கிடைக்காமை காரணத்தாலும் தலைமுடி மிக விரைவில் பலவீனமாகிப் போய்விடுகிறது. அத்துடன் தலைக்குக் குளித்தவுடன் அல்லது தலைக்கு எண்ணெய் தேய்த்தவுடனும் தலையை வாருவதாலும் கூந்தல் மிக விரைவாக வலுவிழந்து உதிரத்தொடங்குகின்றது. மாதம் இரண்டு அல்லது மூன்று முறையாவது எண்ணெயால் மசாஜ் செய்வது மிக நல்லது. மேலும் தினமும் ஒரு கோப்பை கறிவேப்பிலை சாறு எடுத்து குடித்தால் மிகவும் நல்லது. அல்லது கறிவேப்பிலையை காய வைத்து பொடி செய்து உணவில் கலந்தும் சாப்பிடலாம். இவற்றை விட மேலும் சில டிப்ஸ்

- முளைகட்டிய கொண்டைக் கடலையை தினமும் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டால் தலைமுடி நீண்டு வளரும்.
- நெல்லிக்காயை பாலில் அரைத்து பிழிந்து சாறு எடுத்து கொதிக்க வைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து கூந்தலுக்கு தடவி வந்தால் தலைமுடி நன்றாக வளரும்.
- மருதானியையும், கறிவேப்பிலையையும் அரைத்து சாறெடுத்து சம அளவு தேங்காயெண்ணெயில் கலந்து காய்ச்சி தடவி வர முடி கருமையாகவும், பளபளப்புடனும், மிருதுவாகவும் காணப்படும்.
- நாட்டு வெங்காயத்தை இடித்துச் சாறெடுத்து அதனுடன் சோற்றுக் கற்றாழையை இரண்டாக பிளந்து அதில் உள்ள பிசினை எடுத்து இவற்றை இஞ்சிச் சாறு, தேங்காயெண்ணெய், பொலுகிரீக் விதை ஒரு கைப்பிடி அளவு ஆகியவற்றுடன் சேர்த்து தலைமுடிக்கு பேக் போல் போட்டாலும் முடி நீண்டும் கருகருவென்றும் வளரும்.
- தலையில் நல்லெண்ணெய் தேய்த்து ஊற விட்டு அரை மணி நேரம் கழித்து, சாதம் வடித்த கஞ்சியில் சிறிது சீயக்காய்த் தூள் போட்டுக் கலக்கி அதைத் தலைக்குத் தேய்த்துக் குளித்து வர தலைமுடி உதிர்வது நின்று நன்கு வளரும்.

## பெண்களின் நாற்குணங்களும் விளக்கமும்



| | | |
|---|---|---|
| அச்சம் | - | பயம் |
| மடம் | - | தெரிந்தும் தெரியாத நிலை |
| நாணம் | - | வெட்கம் |
| பயிர்ப்பு | - | அருவருப்பு |

### பெண்களின் ஏழு பருவ வயதுகள்

| | | |
|---|---|---|
| 05 - 07 | - | பேதை |
| 08 - 11 | - | பெதும்பை |
| 12 - 13 | - | மங்கை |
| 14 - 19 | - | மடந்தை |
| 20 - 25 | - | அரிவை |
| 26 - 31 | - | தெரிவை |
| 32 - 40 | - | பேரிளம்பெண் |

## உலகநாடுகளின் நேரத்தை கணக்கிடும் கிரீன்விச் முறை தெரியுமா?



உலகம் முழுவதும் நேரத்தை கணக்கிட ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை கிரீன்விச் முறை . இதன் மூலம் நேரத்தை எப்படி கணக்கிடுகிறார்கள் என்று தெரிந்து கொள்வோம். பூமி தன்னைதானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவர 24 மணிநேரம் (1440 நிமிடங்கள்) ஆகிறது அதாவது சூரிய ஒளி பூமியில் ஒரு இடத்தில் பட்டு மீண்டும் அதே இடத்தில் பட ஒரு நாள் ஆகிறது பூமியின் மேல் வடக்கு தெற்காக வரையப்பட்ட கற்பனை கோடுகளே தீர்க்கரேகைகள். இங்கிலாந்து நாட்டில் கிரீன்விச் எனுமிடத்தை 0 தீர்க்க ரேகையாக கொண்டும் அதற்கு கிழக்கு பக்கம் 180 தீர்க்கரேகைகளும் மேற்கு பக்கம் 180 தீர்க்கரேகைகளும் ஆக மொத்தம் 360 தீர்க்கரேகைகளும் விஞ்ஞானிகளால் அமைக்கப்பட்டது.

பூமி உருண்டையின் மேல் உள்ள 360 தீர்க்கரேகைகளின் மீதும் ஒளிபட 24 மணிநேரம் அல்லது 1440 நிடங்கள் ஆகின்றது. 360 தீர்க்கரேகைக்கு = 1440 நிமிடம் எனில் ஒரு தீர்க்கரேகைக்கு 1440 x 1/360 = 4 நிமிடங்கள் ஆகும். சூரிய ஒளி ஒரு தீர்க்கரேகையை கடக்க நான்கு நிமிடங்கள் ஆகின்றது. 15 தீர்க்கரேகைகளை கடக்க 15 x 4 = 60 நிமிடங்கள் ஆகின்றது. இதன் அடிப்படையில் ஒரு ஊர் எந்த தீர்க்கரேகையில் அமைந்துள்ளது என்பதை வைத்து அந்த ஊரின் நேரம் கணக்கிடப்படுகிறது. ஒரு ஊர் 45 தீர்க்கரேகையில் இருந்தால் 0 தீர்க்கரேகையில் இருந்து அந்த ஊரை சூரிய ஒளி கடக்க ஆகும் நேரம் 45 x 4 = 180 நிமிடங்கள் அதாவது மூன்று மணி ஆகும். அந்த ஊர் தீர்க்கரேகையின் கிழக்கு பக்கம் இருந்தால் 12 மணியை கூட்டிக்கொள்ள வேண்டும், மேற்குப்பக்கம் இருந்தால் 12 மணியை கழித்துக்கொள்ள வேண்டும்.

செல்வன். சி.சிவரஞ்சன்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## லவ் கேக்




**தேவையான பொருட்கள்:** சீனி - 750 கிராம், முட்டை - 12, றவை - 450 கிராம், பட்டர் - 450 கிராம், பூசணி அல்வா - 450 கிராம், முந்திரிப் பருப்பு - 750 கிராம், ஏலக்காய்த் தூள் - 4 தே.கரண்டி, கறுவாய்த் தூள் - 1.4 தே.கரண்டி, சாதிக்காய்த் தூள் - 1.4 தே.கரண்டி, பேக்கிங் பவுடர் - 4 தே.கரண்டி, வனிலா எசென்ஸ் - 2 தே.கரண்டி, ஆமெண்ட் எசென்ஸ் - 1 தே.கரண்டி, றோஸ் எசென்ஸ் - 3 தே.கரண்டி

**செய்முறை:** முட்டை வெண்கரு,.மஞ்சட் கருவை வெவ்வேறாக எடுத்துக் கொள்க. எட்டு முட்டைகளின் வெண்கருக்களை நுரை வரக்கூடியதாக நன்கு அடித்துக் கொள்க. முந்திரிப்பருப்பை மிகக் குறுணலாக வெட்டி எடுத்துக் கொள்ளவும். அதே போல் பூசணி அல்வாவையும் குறுணலாக வெட்டி வேறாக எடுத்துக் கொள்ளவும். றவையைத் துப்பரவு செய்து இலேசாக வறுத்துக் கொள்க. முட்டை மஞ்சட் கருவுடன் சீனியைச் சேர்த்து நன்றாக அடிக்கவும், பட்டருடன் றவையைக் கலந்து நன்றாக அடிக்கவும்.

பின்னர் நன்கு அடிக்கப்பட்ட வெண்கரு, மஞ்சட் கருக்கலவையை றவை பட்டர் கலவையுடன் சேர்க்கவும். அத்துடன் ஏலம், கறுவா, சாதிக்காய்த் தூள்களையும் வனிலா மற்றும் ஆமெண்ட் எசென்ஸ், றோஸ் எசென்ஸ், பேக்கிங் பவுடர் என்பவற்றையும் சேர்த்துக் கலந்து கொள்ளவும். கலந்த கலவையை பேக் பண்ணிக் கொள்ளவும்.

பின்னர் கேக்கினை இதய வடிவில் வெட்டி எடுத்து சிவப்பு, இளஞ்சிவப்பு நிறங்களில் ஐசிங்கினால் அலங்கரித்துக் கொள்ளவும். கேக்கின் மேல் உங்களுக்குப் பிடித்த ஏதேனும் காதல் சின்னத்தை பொருத்தமான இடத்தில் வைக்கவும். லவ் கேக் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### வரியற்ற நிலக்கொள்வனவுக்கு சீனாவுக்கு சனாதிபதி அனுமதி

கொழும்பின் பிரதான பகுதிகளில் ஒன்றான நோட்டன் பிரதேசத்தில் 122 பேர்ச் நிலக் கொள்வனவில் ஈடுபட்டுள்ள சீனாவிடம் நிலக் கொள்வனவு வரியினை அறவிடவேண்டாம் என இலங்கையின் சனாதிபதி பணித்துள்ளார்.

நிதிச்சட்டத்தின் படி இலங்கையிலுள்ள காணியொன்றின் உரிமையின் 25 சதவீதத்திற்கு மேல் வெளிநாட்டவரொருவர் கொள்வனவு செய்யும் போது கொள்வனவு விலையின் 100 வீதம் வரியாக அறவிடப்படவேண்டும் எனும் நிபந்தனை காணப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் அந் 100% வரியை அறவிடவேண்டாம் என சனாதிபதி பணித்துள்ளார். அத்துடன் பிரதான மதிப்பீட்டாளரினால் பெறுமதி மதிக்கப்பட்ட விலையினை விட குறைவான விலைக்கு இந் நிலம் விலைபோகவுள்ளது. அதனையும் ஏற்றுக்கொள்ளுமாறு சனாதிபதி பணித்துள்ளார். நிதிச்சட்டத்தின் பொருத்தமான பிரிவுகள் இக்காணி விற்பனைக்கு பொருந்தாது என நிதியமைச்சர் என்ற முறையில் தெரிவித்திருப்பினும் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தியே இப்பணிப்புரைகளை சனாதிபதி விடுத்துள்ளார்.

### உலக நீதிபதிகளின் வருகையை தடுத்தது இலங்கை

இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் இலங்கைக்கு பயணம் செய்யவிருந்த உலக நீதிபதிகளின் குழுவினை நாட்டின் நன்மையைக் கருதி தடுத்துள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. சர்வதேச சட்டவாளர் சங்க மனிதஉரிமை நிறுவனத்தின் மூன்று பேர் கொண்ட குழு எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் இலங்கையில் ஏழு நாட்களைக் கழிக்கவிருந்தனர். அந்நாட்களில் இலங்கையின் சட்டத்துறையின் சுதந்திரத்தன்மை மற்றும் நீதிப் பிரயோகத்தின் நிலை ஆகியவை தொடர்பாக இக்குழு முடிவுகளை மேற்கொள்ளும் ஆய்வுகளைச் செய்யவிருந்தது. இவர்களுக்கான பயண அனுமதியை தற்காலிகமாக பின்தள்ளியுள்ளது அரசு. அரசுமுறைப் பயணமொன்றை செய்வதற்கான அனுமதியை இக்குழு கொண்டிருக்காததுடன் இலங்கையின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் தன்மையைக் கொண்டிருப்பதை மற்றைய காரணமாகவும் கொண்டு இவர்களுக்கான பயண அனுமதியை இரத்துச்செய்துள்ளது.

### சட்டவிரோத மீன்பிடி — தகவலுக்கு 500,000 ரூபா

இலங்கையில் சட்டவிரோத முறைகளில் மீன்பிடிப்பவர்கள் தொடர்பான தகவலை தருபவர்களுக்கான சன்மானம் 5,000 ரூபாவிலிருந்து 500,000 ரூபா வரை உயர்த்தப்பட்டுள்ள போதும் இலங்கையின் கடற்பரப்பில் இந்திய மீனவ றோலர்கள் அத்துமீறிப் பிரவேசித்து சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்கமுடியாதுள்ளது. இச்சட்ட விரோத அத்துமீறலை கண்டிக்கும் வகையில் 5000 மீன்பிடிப்படகுகளை பாக்குநீரிணையில் கச்சதீவுக்கு அருகில் எதிர்ப்பார்ப்பாட்டங்களில் ஈடுபட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தயாராகிவருகின்றார். இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை யாழ்ப்பாண மீன்பிடி அமைப்புக்களூடாக அவர் முன்னெடுத்துள்ளார். அண்மையில் கற்பிட்டி கடலில் சட்டவிரோத மீன்பிடியால் 50க்கும் மேற்பட்ட டொல்பின்கள் மரணமாகி இருந்தது குறிப்பிடத்தக்கது. இதன் பின் 15 மீனவர்கள் இச்சட்டவிரோத மீன்பிடிக்காக கைது செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் நால்வரைத் தேடி காவல்துறை வலை வீசியுள்ளது.

### உல்லாசப் பயண காவல்துறைக்கும் ஆங்கிலம் பேசுபவர்கள் தேவை.

உல்லாசப் பயணிகளை காக்கவென உருவாகிவரும் காவல்துறைக்கு ஆங்கிலம் மற்றும் கணனி அறிவுகொண்ட மேலும் பல காவல்துறையினரை இலங்கை காவல் துறை உள்ளீர்க்க முடிவு செய்துள்ளது. அண்மைக்காலங்களில் உல்லாசப் பயணிகளை தொந்தரவுக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகள் இலங்கையில் அதிகரித்திருப்பதை தகவல்கள் வெளிக்காட்டியிருக்கின்றன.

## The Sunday Observer:

### வெளிநாட்டு மதுபான விற்பனையில் ஈடுபட்டிருந்த தம்பதியினர் கைது.

பெருமளவில் வெளிநாட்டு மதுபானங்களை அனுமதிப்பத்திரம் இன்றி விற்றுக்கொண்டிருந்த தம்பதியினரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இதற்கென இவர்கள் பயன்படுத்திய கறுப்பு முலாமிடப்பட்ட கண்ணாடிகளைக் கொண்ட வான் ஒன்றையும் காவல்துறை கைப்பற்றியுள்ளது.

நாவல மயானத்திற்கு அண்மையில் இத்தம்பதியினர் இறக்குமதி செய்யப்பட்ட ரெட் லேபிள் விஸ்கியை விற்பனை செய்ய முயன்ற போது கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து அந்த வானைச் சோதனையிட்டபோது சுமார் மூன்று லட்சம் பெறுமதியான வெளிநாட்டு மதுவகைகள் அவர்களது கையிருப்பில் இருப்பது தெரியவந்துள்ளது. இதைத் தொடர்ந்து அவர்கள் வெலிக்கடை காவல்துறையில் மேலதிக விசாரணைக்காக கையளிக்கப்பட்டுள்ளனர். இவ்வளவு தொகையான வெளிநாட்டு மதுபானங்களை எவ்வாறு பெற்றுக்கொண்டார்கள் என்றறிவதற்கான விசாரணைகள் தற்பொழுது நடைபெறுகின்றன.

### இருமாத இயற்கை அனர்த்தம் 100 பில்லியன் ரூபாய்களை விழுங்கியது.

கடந்த இரண்டு மாதங்களாக நிகழ்ந்த இயற்கை அனர்த்தங்களால் சுமார் 100 பில்லியன் ரூபா சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 17 பில்லியன் ரூபா தெருவலையமைப்பிலேற்பட்ட சேதங்களாகும். தேசிய பொருளாதாரத்தில் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படுத்தப்படும் சேதங்களின் பங்குகள் என்பது பற்றிய ஆய்வறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக இயற்கை முகாமைத்துவ அமைச்சர் தெரிவித்தார். தம்புள்ளையில் இம்முறையே வெள்ள நிவாரண நடவடிக்கைகளும், வெள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### ஓடும் வண்டியில் வர்த்தகம் செய்யத்தடை...

பேரூந்துகளில் பிச்சையெடுப்பது, விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வது, உண்டியல் ஊடாக காசு சேர்ப்பது போன்ற நடவடிக்கைகளை தடை செய்யவிருப்பதாக தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுணு விஜயரத்ன தெரிவித்துள்ளார். இத்தடை கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. பேரூந்துப் பயணிகளின் அசௌகரியங்களை நீக்கும் ஓர் நடவடிக்கையாகவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்து சட்டம் கூட இவ்விடயங்களைத் தடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள எதிர்ப்புக்களை சமாளிப்போம்

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணியால் இலங்கைக்கெதிராக ஏதாவது பிரேரணைகள் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத்தொடரில் முன்வைக்கப்படுமானால் அதனை எதிர்த்து நிற்க இலங்கை தயாராகவே உள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் இலங்கைக்கெதிராக பாதகமான அறிக்கைகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை எதிர்கொள்ள இலங்கை தயாராகவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தின் பின் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை தெளிவாக வெளிப்படுத்த தாம் தயாராகவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். பிரதி உதவி அமெரிக்க செயலாளரின் தலைமையில் இலங்கைக்கு விஜயம் செய்த மூவர் அடங்கிய குழு அதன் பயணமுடிவில் இலங்கையின் மீது புதிய பிரேரணைகள் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை மீது முன்மொழியவுள்ளதை கோடிட்டுக்காட்டியது. அத்துடன் இம்முன்மொழிவுக்கு இந்தியாவின் பூரண ஆதரவு கிடைக்கும் என்றும் எதிர்வு கூறியுள்ளது.

## The Leader

### கனடா, இலங்கை அரசை எச்சரிக்கிறது.

இலங்கை அரசானது மனித உரிமைகள் தொடர்பாகவும், அதன் பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் சரியான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் கடுமையான சூழலை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என கனடா எச்சரித்துள்ளது. கடந்த மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த கனடியன் குடியுரிமை, குடிவரவு பல் கலாசார அமைச்சர் ஜேசன் ஜெனி ஒன்டாரியோவில் தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது தான் இந்தச் செய்தியை வழங்கியிருந்ததாக தெரிவித்தார். இலங்கையில் தனது கலந்துரையாடல்களின் போது இலங்கையில் அரசியல் நிலைமையானது வளர்ச்சியடைவதை விடுத்து வீழ்ச்சியடைவதையே காணக்கூடியதாக இருந்ததாக தெரிவித்தார். தனது இந்த தீர்மானங்களை கனடிய பிரதம மந்திரிக்கும், வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் தான் அறிக்கையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதன் தொடர்ச்சியாக பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தொடரில் கனடிய தொடர்புகள் எவ்வாறிருக்கும் என்பது பற்றிய தீர்மானத்தை கனடிய பிரதம மந்திரி மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். "கருத்து மிக்க இணக்கத் தீர்வொன்றை போருக்குப் பின்னரான சூழலில் கண்டுகொள்வதற்கு இலங்கை அரசு தவறியுள்ளது. இதனை நிரூபிக்கும் வகையிலேயே பெருமளவு காணாமற் போதல்கள் அவ்வாறு காணாமற் போனவர்களுக்கான பொறுப்புக் கூறல் பற்றிய சிந்தனைகள் எதுவுமின்றியுள்ளது இலங்கை அரசு என அவர் மேலும் தெரிவித்தார்.

### போர்க் குற்றச்சாட்டுக்கள் — இராணுவ விசாரணையில்

இறுதி யுத்தத்தில் இராணுவத்தினால் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் இராணுவ நீதிமன்றம் விசாரித்து வருகின்றது. இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூர்யவின் கூற்றுப்படி இவ்விசாரணை அறிக்கை மிக விரைவில் அரசிடம் கையளிக்கப்படும் என்பது தெரியவருகின்றது. இராணுவ தளபதியால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் அண்மையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக இராணுவத்தின் முன்மொழிவுகளை அண்மையில் இராணுவத்தளபதி அறிக்கை வடிவில் பாதுகாப்பு செயலாளரிடம் கையளித்துள்ளார். எனினும் இவ்வறிக்கைக்கும் குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணை அறிக்கைக்கும் எவ்வித தொடர்புமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

### சவுதி அரேபியாவிற்கான வீட்டுப்பணிபெண்களை அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப்பெண்களை அனுப்புவதனை அரசு தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு சங்கத்தின் தலைவர் அபொன்ஸோ தெரிவித்துள்ளார். அனுப்பப்படும் பெண்களுக்கான சவுதி அரசாங்கத்தினால் வழங்கப்படும் காப்புறுதி பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளும் வரை இத்தடை அமுலில் இருக்கும்.

### சந்திர வட்டக்கல்லை மீளப்பெற்றுக்கொள்ள சர்வதேச காவல் துறையை நாடியுள்ளது இலங்கை

எதிர்வரும் வாரங்களில் பிரித்தானியாவில் ஏலம் விடப்படவுள்ள இலங்கையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட சந்திரவட்டக்கல்லை மீளப்பெற்றுக் கொள்ளும் முயற்சிகளில் சர்வதேச காவல் துறையின் (இன்டபோல்) உதவியை இலங்கை அரசு நாடியுள்ளது. இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆலயத்தினூடாகவே உதவியைப் பெற்றுக்கொள்ள இலங்கை முயற்சிக்கின்றது. அத்துடன் யுனெஸ்கோவின் உதவியையும் இலங்கை வேண்டி நிற்கின்றது.

அதேவேளை இலண்டனில் வாழும் பிக்குகள் சிலர் அந்தக் கல்லை கொள்வனவு செய்வதற்காக நிதிதிரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்

## உலக சாதனை படைத்தார் ஸ்மித்

தென் ஆப்பிரிக்க டெஸ்ட் அணித்தலைவர் ஸ்மித். பெப்ரவரி 1ந் திகதி 2013 அவருக்கு வரலாற்று சிறப்பு மிக்க நாளாகும். 100 டெஸ்ட் போட்டிக்கு அவர் அணித்தலைவராக பணியாற்றி உலக சாதனை படைத்தார்.



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் அவரது தலைமையில் 100-வது டெஸ்ட் ஆகும்.

100 டெஸ்ட் போட்டிக்கு அணித்தலைவராக இருந்த உலகின் முதல் வீரர் என்ற சாதனையை ஸ்மித் பெற்றார். அதோடு அன்றைய தினம் அவருக்கு 32-வது பிறந்தநாள் ஆகும். ஆலன்பார்டர் (ஆஸ்திரேலியா) 93 டெஸ்டுக்கும், பிளமிங் (நியூசிலாந்து) 80 டெஸ்டுக்கும், பொண்டிங் (ஆஸ்திரேலியா) 77 டெஸ்டுக்கும், கிளைவ் லாயிட் (மேற்கிந்தியா) 74 டெஸ்டுக்கும், ஸ்டீவ்வோ (ஆஸ்திரேலியா) 57 டெஸ்டுக்கும் அணித்தலைவராக இருந்து உள்ளனர்.

## அப்ரிடியின் வேண்டுகோள்.

இலங்கை கிரிக்கெட் அணி 2009ம் ஆண்டு பாகிஸ்தான் சென்றபோது லாகூரில் தீவரவாதிகள் இலங்கை வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இலங்கை வீரர்கள் சென்ற பஸ் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இதைத் தொடர்ந்து பாகிஸ்தானில் சர்வதேச போட்டி எதுவும் நடைபெறவில்லை. எந்த நாட்டு அணியும் அங்கு செல்லவில்லை. பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்பட்டு 4 ஆண்டுகள் ஆகிறது. பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்-படும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கிரிக்கெட்-உலகிற்கு பாகிஸ்தான் அணியின் முன்னால் அணித்தலைவர் அப்ரிடி உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகள் நடைபெற அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.



## மும்பை இந்தியன்ஸ் அணி தலைவராக சச்சின் ரசிகர்களிடையே மகிழ்ச்சி

2008ம் ஆண்டில் துவக்கப்பட்ட ஐ.பி.எல்., இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகள். உலகின் பல்வேறு அணிகளை சேர்ந்த வீரர்களும் ஒன்றாக இணைந்து இப்போட்டிகளில் கலந்து கொள்வதால் இப்போட்டிக்கு கிரிக்கெட் ரசிகர்களிடேயே பலத்த வரவேற்பு இருந்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் இந்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. 2013ம் ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டிகள் ஏப்ரல் 3-ம் தேதி தொடங்க உள்ளது. இந்நிலையில், மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக சச்சின் டெண்டுல்கர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். சச்சின் டெண்டுல்கர் 2008ம் ஆண்டு முதல் 2010 வரை மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தலைவராக பொறுப்பு வகித்தார். அதன்பிறகு, 2010ல் நடைபெற்ற ஐ.பி.எல். கிரிக்கெட்டில் இறுதிப்போட்டியில் இந்த அணி போராடி தோற்றது. அதன்பிறகு, கேப்டன் பதவியிலிருந்து விலகினார். பின்னர் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஹர்பஜன்சிங் அணித்தலைவராக பதவியேற்றார். இவருடைய தலைமையில் மும்பை இந்தியன்ஸ் 2011ல் ஐ.பி.எல் கோப்பையை வென்றது. தொடர்ந்து 2012ல் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டியிலும் இந்த அணிக்கு ஹர்பஜன் சிங்கே அணித்தலைவராக தொடர்ந்தார். இந்நிலையில், மீண்டும் அந்த அணிக்கு டெண்டுல்கர் அணித்தலைவராக பதவியேற்றது கிரிக்கெட் ரசிகர்களிடேயே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## நடுவர் ஆசாத் மீது கொடுத்த புகாரை மீளப் பெற்றுக்கொண்டார் வீனா கபூர்

மும்பையை சேர்ந்த மாடல் அழகி வீனா கபூர், பிரபல பாகிஸ்தான் கிரிக்கெட் நடுவர் 56 வயதான ஆசாத் ரவுப் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் பாலியல் புகார் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். தன்னுடன் பலமுறை உல்லாசமாக இருந்து விட்டு திருமணம் செய்து கொள்ள மறுக்கிறார், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மும்பை ஓஷிவாரா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இருவரும் நெருக்கமாக இருக்கும் புகைப்-படங்களையும் வெளியிட்டார். வீனா கபூரின் குற்றச்சாட்டை ஆசாத் ரவுப் மறுத்தார். இந்த நிலையில் 6 மாதங்களுக்கு பிறகு நடுவர் ஆசாத் மீது கொடுத்த புகாரை, ஓஷிவாரா காவல் நிலையத்திற்கு நேரில் சென்று வீனா கபூர் எழுத்துபூர்வமாக மீளப்பெற்றுக்கொண்டார்.

இது குறித்து அவர் கூறுகையில், ஆசாத் ரவுபுக்கும் எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. புகார் கொடுத்து வழக்கை பதிவு செய்ய விரும்பவில்லை. பிரச்சினையில் இருந்து விடுபட முயற்சிக்கிறேன். இந்த விவகாரத்தால் நான் வேலைவாய்ப்பு உள்பட நிறைய இழந்து விட்டேன். இனி மேலும் எந்த சர்ச்சையிலும் சிக்க விரும்பவில்லை என்றார்.

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

## 6வது ஐ. பி. எல் ஏலத்தில் அஜந்த மெண்டிஸ் இரண்டாம் இடம்

6வது ஐ.பி.எல். இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 3ம் திகதி முதல் மே 26ம் திகதி வரை நடக்கிறது. இதில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் உள்பட 9 அணிகள் பங்கேற்கின்றன. இந்தப்-போட்டிக்கான வீரர்கள் ஏலம் சென்னையில் நடந்தது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, மேற்கிந்தியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளை சேர்ந்த 108 வீரர்கள் இடம் பெற்று இருந்தனர். இதில் 37 வீரர்கள் தான் ஏலம் போனார்கள். இந்திய மதிப்பில் மொத்தம் 'ரூ.62.42 கோடிக்கு விற்பனை ஆனார்கள். 71 வீரர்கள் விலை போகவில்லை. இதில் புனே வாரியர்ஸ் அணிதான் அதிகம் செலவழித்தது. அந்த 4 வீரர்களை இந்திய மதிப்பில் 'ரூ.13.12 கோடிக்கு எடுத்தது. அந்த அணி இலங்கை அணி வீரர் அஜந்த மெண்டீசை இந்திய மதிப்பில் ரூ. 3.80 கோடிக்கும், ஆஸ்திரேலியா வீரர் கானே ரிச்சர்ட்சனை இந்திய மதிப்பில் ரூ.3.6 கோடிக்கும், அபிஷேக் நாயரை (இந்தியா) இந்திய மதிப்பில் ரூ. 3.50 கோடிக்கும், ஆஸ்திரேலியா அணித்தலைவர் கிளார்க்கை இந்திய மதிப்பில் ரூ. 2.10 கோடிக்கும் எடுத்தது. இந்த 37 வீரர்களில் அதிக விலைக்கு போனவர் ஆஸ்திரேலிய வீரர் மேக்ஸ் வெல் ஆவார். அவரை மும்பை இந்தியன்ஸ் அணி இந்திய மதிப்பில் ரூ. 5.30 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது.. அதிக விலைக்கு ஏலம் போன வீரர்கள் பட்டியலில் மெண்டீஸ் 2வது இடத்திலும், கானே ரிச்சர்ட்சன் 3வது இடத்திலும், அபிஷேக் நாயர் 4வது இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. புனே வாரியர்சுக்கு அடுத்தப்படியாக மும்பை இந்தியன்ஸ் அணி இந்திய மதிப்பில் ரூ. 10.5 கோடி செலவழித்தது. அந்த அணி மேக்ஸ்வெல் உள்பட 5 வீரர்களை ஏலத்தில் எடுத்தது. ராஜஸ்தான் ராயல்ஸ் அணி தான் குறைந்தபட்சமாக செலவழித்த அணியாகும். அந்த அணி 3 வீரர்களை இந்திய மதிப்பில் மொத்தம் ரூ. 3.30 கோடி செலவழித்தது. நேற்றைய ஏலத்தில் இளம் வீரர்களுக்குத்தான் ஒவ்வொரு அணியின் உரிமையாளர்களும் முக்கியத்துவம் கொடுத்தனர். மேக்ஸ்வெல், கானே ரிச்சர்ட்சன், சேன நாயக்க, கிறிஸ்டோபர் மோரிஸ் ஆகியோர் எடுக்க ஒவ்வொரு அணியும் கடுமையாக போட்டி போட்டன. போலிஞ்சர், பிரையர், ரவிபோபரா, குப்தில், பிலாண்டர், உபுல் தரங்கா, கெவின் ஒபிரையின் போன்ற முன்னணி வீரர்கள் விலை போகாததது ஆச்சரியமே. புதிதாக வாங்கப்பட்ட 37 வீரர்களும் ஒரு ஆண்டுக்கு மட்டுமே ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளனர்.




## பாக் - தென் ஆபிரிக்க டெஸ்டில் ஸ்டெய்னின் அபார பந்து வீச்சால் தென் ஆபிரிக்கா அணி முன்னிலை

ஜொகான்னஸ்பர்கில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் உணவு இடவேளைக்கு முன்பே பாகிஸ்தான் தனது இரண்டாவது இன்னிங்சில் 268 ரன்களுக்கு சுருண்டது. தென் ஆப்பிரிக்கா 211 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தென் ஆப்பிரிக்கா 1 - 0 என்று முன்னிலை வகிக்கிறது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் ஸ்டெய்னின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் 49 ரன்களுக்கு சுருண்டது. தென் ஆப்பிரிக்கா 204 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தாலும் பாலோ ஆன் கொடுக்கவில்லை, இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 275 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது தென் ஆப்பிரிக்கா. பாகிஸ்தான் அணி 2வது இன்னிங்சில் 268 ஓட்டங்களுக்கு சுருண்டது. டேல் ஸ்டெய்ன் முதல் இன்னிங்ஸில் 8 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு 2வது இன்னிங்ஸில் 52 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். விக்கெட்காப்பாளர் ஏ.பி.டி வில்லியர்ஸ் இந்தப் போட்டியில் சதம் எடுத்ததோடு 11 பிடிகளை பிடித்து உலக சாதனையை சமன் செய்துள்ளார். ஆனாலும் ஆட்ட நாயகன் விருது டேல் ஸ்டெய்னின் அபார பந்து வீச்சிற்கே கிடைத்தது. உண்மையில் மிகவும் அபாயகரமான பந்து வீச்சாளராகியுள்ளார் ஸ்டெய்ன்.



உங்கள் அச்சு தேவைகளை
பூர்த்தி செய்ய




#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0773663103 & ssdigitals.shan@gmail.com

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 09. 02 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org